பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 03 சனிக்கிழமை 19.11.2022 கதிர் 14

**இது ரகசியம் அல்ல!**

நேற்று தெற்கு அதிவேகப் போக்குவரத்துப் பாதை ரொம்ப பிஸி. வெள்ளிக்கிழமை வார இறுதி என்பதால் ஊருக்கு திரும்பும் வாகனங்கள் காரணமாக இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனாலும் காலையிலேயே பாதைப் ☞2

# சமஷ்டிதான் தீர்வுக்கு வழி

## அது குறித்துக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச வேண்டும் என்கின்றார் சிறீதரன் எம்.பி.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் இருக்கின்றார் என்றால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பாராக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சமஷ்டி அடிப்படையிலேயே பேச வேண்டும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.** ☞2



## பல்கலை மாணவர் மீது நேற்று கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட போராட்டத்தை கலைக்கும் வகையில், பொலிஸாரால் இரு இடங்களில் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் ☞2



## ஐ.நா. உயர்மட்டக் குழு யாழ். மேயருடன் பேச்சு

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், நவ.18

ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கும் யாழ் மாநகர மேயர் வி.மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பொன்று ☞2

## கனடாப் பயணப் பொதிகளுடன் கம்பி நீட்டிய வாகனத்தின் சாரதி

கனடாவிலிருந்து வந்தவர்களை விமானநிலையத்திலிருந்துயாழ்ப்பாணம் நோக்கி அழைத்து வந்த வாகனச் சாரதி ஒருவர் பெறுமதியான பொருள்களுடன் தலைமறைவாகியுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த போது குருநாகலுக்கு அண்மையில் மதிய உணவுக்காக வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது.

கனடாவில் இருந்து வந்தவர்கள் உணவகத்துக்கு சென்றுள்ளனர். வாகன சாரதி உணவருந்த அழைத்தபோது அவர் மறுத்து வாகனத்தில் இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். ☞2

## கடன் மறுசீரமைப்பு பேச்சு ஒத்திவைப்பு



கொழும்பு,நவ.19

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெறவிருந்த கடன்மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை இலங்கை ஒத்திவைத்துள்ளது என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கியவர்கள் முன்வைத்துள்ள கேள்விகள், சந்தேகங்களிற்கு மத்திய வங்கியும் திறைசேரி அதிகாரிகளும் பதிலளிப்பதற்கான கால ☞2



## மீண்டும் நேற்று கோட்டா பொது நிகழ்வுக்கு வந்தார்

ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, முதல் தடவையாக கோட்டாபய ராஜபக்ஷ பொது நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்துகொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் நிகழ்வை முன்னிட்டு கொழும்பு அபேராமாவில் ☞14

## நல்லூர் திருவிழாக் காலத்தில் வருமானம் மாநகர சபைக்கு ஒன்றரைக் கோடி ரூபா!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.19

2022 ஆண்டின் நல்லூர் உற்சவத்தின்போது யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கிடைத்த வருமானம் 2 கோடியே 37 லட்சத்து 69 ஆயிரத்து 795 ரூபா 98 சதம் என கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லைக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ காலத்தில் ஆலய சூழலில் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகள் காரணமாகவே இந்த வருமானம் ஏற்பட்டுள்ளது.


இதேநேரம் ஆலயம் சார் பிரதேசத்தில் மாநகர சபையால் மேற்கொள்ளும் பணிகளிற்காக ☞14

## கிளிநொச்சிக் கொலைச் சம்பவ சந்தேகநபர் கொழும்பில் கைது

கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் நண்பர்களுக்கு இடையில் ☞2

## இன்றும் நாளையும் ஜனாதிபதி வவுனியாவிலும் மன்னாரிலும்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.19

இன்றும் நாளையும் வடக்கிற்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா வவுனியா மற்றும் மன்னாரில் பல நிகழ்வுகளில் பங்கு கொள்கின்றார்.

அவர் இன்று காலை 10 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு வருகை தருகின்றார். அங்கு வவுனியா மாவட்டச் செயலகத்தில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு ☞14

## ராஜீவ் வழக்குக் கைதிகளின் எஞ்சிய வாழ்வையாவது வாழ்வதற்கு விடுங்கள்!

### கைதிகளுக்கான அமைப்பு மன்றாட்டம்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையை சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை ☞14

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து நெருக்கடியாக இருந்தது. அது மாத்திரமல்ல, வி.ஐ.பிக்களின் வாகனங்களும் அவற்றுக்கான பாதுகாப்பு தொடர் அணிகளும் கூட கூவிக்கொண்டு பறந்த வண்ணம் இருந்தன. என்ன, ஏது என்று தேடிப் பார்த்தேன்.

நாட்டின் முக்கிய அரசியல் பிரமுகரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்றுப் பிறந்த தினம். அவர் அம்பாந்தோட்டையில் சொந்த வீட்டில் பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். அதற்காக அவருக்கு சலாம் வைக்க - வாழ்த்துச் சொல்ல - அரசியல் பிரமுகர்களில் இருந்து, ராஜதந்திரிகள் வரை அம்பாந்தோட்டைக்கு படையெடுத்தமையால்தான் அந்த வாகனப் போக்குவரத்து பிஸி.

பாவம் மஹிந்தர். மனிதருக்கு நேற்று 77 வயது. இந்த வயோதிப காலத்தில் கூட அவர் தமது பிறந்த தினத்தை ஆற அமர ஓய்வாக வீட்டிலிருந்து அனுபவித்துக் கொண்டாட சூழல் விடவில்லை.

நேற்றுகாலை அவர் கொழும்பில்தான் இருந்தார். கொழும்பு அபேராம விகாரையில் அதிகாலை நாலு மணிக்கு சமய நிகழ்வாம். பிறந்தநாள் அன்று கூட கொஞ்சம் சாவகாசமாகத் தூங்கவிடாமல் குழப்பி, நேரத்துடன் அபேராம மண்டபத்துக்கு அனுப்பி விட்டார்கள். கூடவே சகோதரர் - ஜனாதிபதி பதவியை இழந்த - கோட்டாபயவும். பதவியை இழந்த பிறகு அவர் பங்கு கொள்ளும் முதல் பொது நிகழ்ச்சி. காலை 6, 7 மணிக்குள் அபேராம் விகாரையில் கூடியிருந்த பல நூற்றுக்கணக்கான பிக்குகள் மத்தியில் சமய நிகழ்வை முடித்துக் கொண்டு சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவின் தற்போதைய உத்தியோகபூர்வ இல்லத்திற்கு தமது மனைவி மற்றும் நெருங்கிய உறவினர்களுடன் சென்ற மஹிந்த ராஜபக்ஷ அங்கு காலை உணவை முடித்துக் கொண்டு, அங்கிருந்து தம்பியாரையும் ஏனைய உறவினர்களையும் கூட்டிக் கொண்டு அதிவேகப் பாதை வழியாக அம்பாந்தோட்டைக்குச் சென்றார். நேற்று முழுநாள் பிறந்த தினக் கொண்டாட்டமும் அங்குதான். கொழும்பிலிருந்து அரசியல்வாதிகள், அமைச்சர்கள், பிரமுகர்கள், வர்த்தகர்கள் என வரிசையாகப் பெரும் கூட்டம் நேரில் சென்று பிறந்த நாள் வாழ்த்துக் கூற அம்பாந்தோட்டைக்குப் படை எடுத்தது. அதுதான் தெற்கு அதிவேகப் பாதை வழமைக்கு மாறாக நிரம்பி வழிந்தமைக்குக் காரணம்.

***

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிக்கும் முடிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - மஹிந்த ராஜபக்ஷ இணை எடுத்து இருந்தாலும், அதன் நடைமுறையாக்கம் தாமதமாகி வருகிறது. காரணத்துடன்தானாம்.

இந்த ஒன்பது மாகாண ஆளுநர்களிலும் சிலர் கோட்டாபய ராஜபக்ஷவினால் விசேடமாகத் தேர்வு செய்து நியமிக்கப்பட்டவர்கள். அவர்களைத் தான் பதவிக்கு வந்த கையோடு வீட்டுக்கு அனுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் பின்னடிக்கின்றார். அது சரியில்லை என்று யோசிக்கின்றார். அதன் காரணமாக ஒட்டுமொத்தமாக ஒன்பது மாகாண ஆளுநர்களையும் மாற்றும் திட்டம் தாமதமாகி வருகிறது.

எனினும் அதைப் பார்க்காமல், ஆளுநர் நியமனங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு மஹிந்த தரப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோர இருப்பதாகத் தெரிகிறது.

கிழக்கு ஆளுநரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேரடியாகத் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டவர் என்று கூறப்படுகின்றது. அந்த இடத்துக்கும் புதியவரை நியமிப்பது குறித்து ஒன்றுக்கு இரண்டு தடவை ஜனாதிபதி ரணில் சிந்திக்கின்றார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. ஆளுநர் மாற்றங்கள் நிச்சயம். ஆனால் அது பிள்ளையார் கல்யாணம் போல தள்ளிப் போகின்றது போலும்.

- மின்னல் -

## சமஷ்டிதான் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, பௌத்த மேலதிக்க சிந்தனையும், இனவாத சிந்தனையும் ஒருபோதும் நாட்டின் பொருளாதார சிந்தனைகளை மேலோங்க விடாது என்றும், இதனால் இந்தச் சிந்தனைகளில் இருந்து வெளியேவந்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எவ்வாறு வழங்குவது என்ற வழிகளை தேடுமாறு சிங்கள இளைஞர், யுவதிகளைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் உரையாற்றுபவர்கள், இது ஜனாதிபதி கொண்டு வந்துள்ள வரவு - செலவுத் திட்டம் என்றும், இது நாட்டில் பெரிய மாற்றத்தைத் தருவதைப் போன்றும் கருத்துக்களை கூறுகின்றனர். அவரின் ஆதரவாளர்களே இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

நாடொன்றின் வரவு - செலவுத் திட்டம் என்பது வருமானத்தின் எல்லை, செலவு எவ்வளவு என்பதைக் கூறும் வகையிலேயே இருக்க வேண்டும். ஆனால் அன்றாடங்காய்ச்சி போன்றே ஜனாதிபதி இந்த வரவு - செலவுத் திட்டத்தைத் சமர்ப்பித்துள்ளதாகவே நினைக்கின்றேன். அன்றைய நாளில் யாரிடமாவது கடனை வாங்கி, தான் இந்த நாட்டை கொண்டு போவது போன்றே அவர் கனவு காண்கின்றார். ஆனால் பேரண்ட பொருளாதாரத் திட்டங்கள் எதனையும் அவர் முன்வைக்கவில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டம் மீண்டும் போரைப் போன்று படைகளுக்கான நிதியைக் குவித்துள்ளது. யுத்தமில்லாத நாட்டில் எதற்கு இவ்வாறு அதிக நிதியை இதற்காக ஒதுக்க வேண்டும்?

75 வீதமான படையினர் வடக்கிலும், கிழக்கிலும் குவிக்கப்பட்டுள்ளனர். மயிலிட்டி போன்ற இடங்களில் தமிழ் மக்களின் காணிகளில் படையினரே விவசாயம் செய்கின்றனர். வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகள் படையினரின் பண்ணைகள் போன்றே உள்ளன.

இதற்காக ஒதுக்கும் பணத்தை ஏன் அங்குள்ள விவசாயிகளுக்காக ஒதுக்க முடியவில்லை? அவ்வாறு ஒதுக்கி அவர்கள் முன்னேறும் முறையை உருவாக்கியிருந்தால் நாடு முன்னேறியிருக்கும். ஆனால், இராணுவத்தை தக்க வைப்பதற்காகவும், அவர்களின் பலத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கான சூழ்ச்சி வலையாகவும் இந்தளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மீண்டுமொரு போருக்கு அடிகோலுகின்ற மற்றும் அச்சுறுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது.

இதேவேளை, இந்த நாட்டின் அரச இயந்திரம் இயங்க முடியாத நிலைமையில் உள்ளது. அதனை இயக்க முடியாது தடுமாறுகின்றனர். எப்படி இயந்திரத்தை இயக்கப் போகின்றீர்கள்? உங்களின் மனங்களில் உள்ள பௌத்த மேலதிக்க மற்றும் இனவாத சிந்தனைகள் ஒருபோதும் உங்களின் பொருளாதார சிந்தனைகளை மேலோங்க விடாது.

தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றாக வாருங்கள் என்று அரசில் உள்ளவர்கள் கூறுகின்றனர். ஏதோ தீர்வுகளைக் கையில் வைத்திருப்பதைப் போன்றே மஹிந்தானந்த அளுத்கமக மற்றும் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் கூறுகின்றனர். நிமல் சிறிபால டி சில்வா தமிழ் மக்களுடனான பல்வேறு பேச்சுகளுடன் தொடர்புபட்டவர். அவருக்கு என்ன காரணத்துக்காகத் தீர்வுகளை வழங்கவில்லை என்பது தெரியாதா? ஆகவே இவர்கள் காலத்தைக் கடத்தும், ஏமாற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள்.

இனவாதம் மற்றும் பௌத்த பேரினவாத சிந்தனைகளில் இருந்து வெளியே வந்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எவ்வாறு வழங்குவது என்ற வழியைப் பார்க்குமாறு சிங்கள இளைஞர், யுவதிகளை நாங்கள் கேட்கின்றோம்.

தவறான சிந்தனைகள் இந்த நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றுள்ளன. சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் கதைக்கின்றனர். ஆனால், இங்கே இராணுவத்தைக் குறைக்காது, அதற்காக ஒதுக்கும் நிதியைக் குறைக்காது, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைக்காது, சர்வதேச நாணய நிதியம் உங்களுக்கு உதவி வழங்கினால், எமது இனத்துக்கு உலகம் செய்யும் துரோகமாகவே அமையும்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் இருக்கின்றார் என்றால், இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள பிரச்சினையை தீர்க்க சரியான மனிதனாகவும், உண்மை முகத்தை வெளியில் கொண்டு வரவும் விரும்பினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சமஷ்டி அடிப்படையில் பேசுங்கள். சமஷ்டி என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடன் இருக்கின்றார் என்றால், இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பாராக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சமஷ்டி அடிப்படையிலேயே பேச வேண்டும் - என்றார்.

## பல்கலை மாணவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு தாமரைத் தடாகத்திற்கு அண்மித்த பகுதியில் வைத்தும், கொழும்பு பிளவர் வீதியில் வைத்தும் பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மற்றுமொரு மாணவர் குழு உட்பட பாரிய ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று பொரளை மயானச் சுற்று வட்டத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை நோக்கி வந்தடைந்தது.

சிறைச்சாலையில் உள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்யக் கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டக்காரர்களே இரண்டு இடங்களில் வைத்துப் பொலிஸாரால் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுத் துரத்தப்பட்டனர்.

## ஐ.நா. உயர்மட்டக் குழு ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்கள் திணைக்கள ஆசிய பசுபிக் பிரிவுக்கான பணிப்பாளர் பீற்றர் டியூ, அரசியல் விவகார அதிகாரி அல்மா சாலியு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாண மாநகர சபைக்கு விஜயம் செய்தனர்.

சந்திப்பின் நிறைவில் ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருகைதந்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினர் பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கனடாப் பயணம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் திரும்பி வந்து பார்த்த போது வாகனம் அங்கு இருக்கவில்லை. வாகனத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான, பொருடகள் அடங்கிய 9 பயணப் பொதிகள் இருந்துள்ளன. சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் கனடாவில் இருந்து வந்தவர்கள் ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

## கடன் மறுசீரமைப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவகாசத்தை வழங்குவதற்காக இலங்கை வியாழக்கிழமை இடம்பெறவிருந்த கடன் பேச்சுவார்த்தைகளை ஒத்திவைத்துள்ளது என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் நிதி உதவியை பெறுவதற்கான இணக்கப்பாட்டை எட்டிய பின்னர் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை இலங்கை செப்டம்பரில் ஆரம்பித்தது. இலங்கை தசாப்தகாலத்தில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதை நோக்கிய நடவடிக்கையாக இது காணப்பட்டது.

எனினும் இலங்கை தனக்கு பெருமளவு கடன்களை வழங்கிய இந்தியா, சீனா போன்ற நாடுகளிடமிருந்து நிதி உத்தரவாதங்களை பெறவேண்டிய நிலையில் உள்ளது. இதன் பின்னரே சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைக்கும்.

இலங்கைக்கு கடன்வழங்கிய பலர் பல்வேறு கரிசனைகளை வெளியிட்டுள்ளனர். அதற்கான தெளிவுபடுத்தல்களை கோரியுள்ளனர். ஆகவே இதற்கான தெளிவுபடுத்தல்கள் முதலில் இடம்பெறும். அதன் பின்னர் புதிய சுற்றுப்பேச்சுகளுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த சுற்றுப்பேச்சுக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு கடன்வழங்கியவர்களின் கரிசனைகள் என்ன, அவர்களிற்கும் திறைசேரி அதிகாரிகளிற்கும் இடையிலான பேச்சுகளின் போது ஆராயப்பட்ட விடயங்கள் என்ன என்பதை அமைச்சர் தெரிவிக்கவில்லை.

நான்கு வருட திட்டத்திற்கான சர்வதேச நாணயநிதியத்தின் அனுமதியை டிசெம்பரில் பெறுவதற்கான காலக்கெடுவுடன் இலங்கை செயற்படுகின்றது. நாங்கள் நிதி உத்தரவாதங்கள் குறித்து கவனம் செலுத்துகின்றோம். எங்களிற்கு கடன் வழங்கிய எவரும் தாங்கள் எங்களிற்கு ஆதரவளிக்கமாட்டோம் என தெரிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களிற்கு இலக்கொன்று உள்ளது. நாங்கள் டிசம்பரிற்குள் அந்த இலக்கை அடைய முயல்கின்றோம். - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சிக் கொலைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் வட்டக்கச்சி - கிளிநொச்சி பகுதியைச்சேர்ந்த ஜெயசீலன் ஜெயகரன் (வயது 33) என்ற நபர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டதாக ஆறு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அவர்கள் தற்பொழுது தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதில் தேடப்பட்டு வந்த ஒரு நபர் கொழும்பு -13 பகுதியில் ஒளிந்திருக்கிறார் எனக் கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத் தடுப்பு (இரணைமடு) பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பாரதிபுரம் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 18 வயதுநபர் எனபொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணை நிறைவு பெற்றதும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரை ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்,
Liverpool UKn வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி தோத்திரமலர் சச்சிதானந்தம்

(இளைப்பாறிய ஆசிரியை, சதானந்தா வித்தியாசாலை அளவெட்டி மற்றும் யூனியன்கல்லூரி தெல்லிப்பளை)



யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், Liverpool UKn வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி தோத்திரமலர் சச்சிதானந்தம் (சதானந்தா வித்தியாசாலை அளவெட்டி மற்றும் யூனியன்கல்லூரி தெல்லிப்பளை) அவர்கள் 11.11.2022 வெள்ளிக்கிழமை அன்று சிங்கப்பூரில் இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மௌனதவமுனி பொ.கைலாசபதி (ஓய்வுபெற்ற உபஅதிபர் ஆசிரியகலாசாலை, திருநெல்வேலி) - இராசம்மா தம்பதிகளின் (அளவெட்டி) பாசமிகு மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதிகளின் (அளவெட்டி) அன்பு மருமகளும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், மல்லாகம்) அவர்களின் ஆருயிர் மனைவியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி பழைய மாணவர்களாகிய ஜனீந்தா(UK) கோபிநாத் (Singapore) மேனகா (UK) கஜன்(UK) அவர்களின் பாசமிகு தாயாரும், நடேசராணியின் பாசமிகு சகோதரியும், கைலாசபதி, கோபிகா, துளசிகா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் சயந்தன், கிருஷ்ணலீலா ,சுதர்ஜன், மதுரா மற்றும் வவித்திரா, ரஜீவன், சஜுபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சஞ்சித், கங்கேஷ், ஆருஷி, வைஷ்ணவி, வைாலி, தருணி, கிர்த்திக், ஹரிஷ், சாத்விக், சாகினி மற்றும் கவிஷ், ஹரிணி, பிரணவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற செல்லையா இராமச்சந்திரன், காலஞ்சென்ற சிவகுருநாதன் அன்னபூரணம் மற்றும் சுந்தரலிங்கத்தின் அன்பு மைத்துனியும் பிரபாகரன், கிருபாகரன் ஆகியோரின் அன்பு அத்தையும், நிரோசா, ரிசாந்தி ஆகியோரது சின்னம்மாவும் ஆவார்.

சிங்கப்பூர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது உடல் புதன்கிழமை Liverpool( UK) இற்கு எடுத்துவரப்பட்டு, வரும் ஞாயிற்றுகிழமை 20.11.2022 அன்று Liverpool, The Cricketers Long Lane, Wavetree L15 4HF இல் உள்ள அரங்கத்தில் காலை 9.00 மணி முதல் 12:30 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று West Lancashire Cemetery & Crematorium Pippin St, Ormskirk L40 7SP இல் 1.30 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும்**
**குடும்பத்தினர்**

+44 7984289689 (Jana)
+44 7398077711 (Gobi)
+44 7399092918 (Mena)
+44 7956362731 (Kajan)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் முடிவு வெளிவரும்

**புதிய ஜனாதிபதியாக பதவியேற்று நான்கு மாதங்களின் பின்னர் முதல் தடவையாக இன்று ரணில் விக்கிரமசிங்க வடக்கே வருகின்றார்.**

**இன்று வவுனியாவிலும், நாளை மன்னாரிலும் அவர் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுகின்றார்.**

**வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு அவர் விஜயம் செய்தாலும், அதன் கீழ் அடங்கும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்திற்கு அவர் செல்ல மாட்டார். முல்லைத்தீவு அரச அதிகாரிகளை இன்று வவுனியா செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் வைத்து அவரைச் சந்திக்குமாறு பணிக்கப்பட்டிருக்கின்றது.**

**வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கும் அவர் இப்போது வரவில்லை. யாழ்ப்பாணத்துக்கு ஜனவரியில் வருவேன் என்று கடந்த 14ஆம் திகதி வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின்னர், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற, தேநீர் விருந்தின் போது சுமந்திரனிடம் அவர் தெரிவித்திருக்கிறார்.**

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை இடைவழியில் துறந்தமையால் கிடைத்த அதிகாரத்தையே ரணில் விக்கிரமசிங்க இப்போது வகிக்கின்றார்.**

**கோட்டாபய ராஜபக்ஷவின் பதவியில் எஞ்சியிருந்த இந்த இரண்டு வருடங்கள், நான்கு மாதங்கள் இப்போது ரணிலுக்குக் கிட்டி இருக்கின்றது. அதில் நான்கு மாதங்கள் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகக் கடந்து விட்டார். இன்னும் இரண்டு வருடங்கள் அவருக்குப் பதவி காலம் உண்டு.**

**கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியாக இருந்த இரண்டு வருடங்கள் 8 மாத காலத்தில் ஒரு தடவை தன்னும் யாழ்ப்பாணப் பக்கம் தலை வைத்தே படுத்தவர் அல்லர். வவுனியாப் பல்கலைக்கழக ஆரம்ப விழாவுக்காக வவுனியாவிற்கு ஒரு குறுகிய நேர விசிட் அடித்தார். அவ்வளவே.**

**ஆனால் ரணில் விக்கிரமசிங்க, தாம் தமிழர் தரப்புடன் – வடக்கு எம்.பிக்களுடன் – அடுத்த வாரம் பேசப்போகிறேன் என்று கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.**

**அவர் அறிவித்த ‘அடுத்த வாரம்’ இன்றுடன் காலாவதியாகப் போகின்றது. இந்தச் சமயத்தில் அவர் வவுனியா, மன்னாரில் நிற்கின்றார்.**

**கடந்த வாரம் அவர் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்புக் குறித்து ஒரு குழப்ப நிலை நீடிக்கின்றது.**

**வடக்கு எம்.பிக்களுடன் மட்டும்தானா அவர் பேசப் போகின்றார்? வடக்கு – கிழக்கு என்று பிரித்து வைத்துத்தான், தேசிய இனப்பிரச்சினை விடயத்தை அவர் கையாளப் போகின்றாரா? அவர் தமிழர் தரப்புகளுடன் எது குறித்து பேசப் போகின்றார்? இனப் பிரச்சினைத் தீர்வு பற்றியா, அல்லது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் உத்திகள் குறித்தா அவர் தமிழர் தரப்புடன் அங்கு பேசப் போகின்றார்?**

**– இப்படி அவரது (ஜனாதிபதியினது) முன்னறிவிப்புத் தொடர்பில் பல கேள்விகள், சந்தேகக் கோலங்கள், ஐயங்கள் உலாவுகின்றன. இன்றும் நாளையும் வவுனியா, மன்னார் நிகழ்வு உரைகளின் போது நிலைமையைத் தெளிவுபடுத்தி தன் நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கலாம்.**

## தென்னாபிரிக்க ஜனாதிபதி ரணிலை சந்தித்துப் பேச்சு!



தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுநாடுதிரும்பும்போது ஜனாதிபதி ரமபோசா இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

கட்டுநாயக்கவில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக வும் இரு தரப்பினரும் பேச்சு நடத்தினர்.

## சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை முழுமையாக இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமுல்படுத்தலாம்!

### சித்தார்த்தன் எம்.பி. ஆலோசனை



இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மீண்டும் தெரிவுக்குழு, ஆணைக்குழு அமைத்து நிதியை செலவு செய்யாமல், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கொண்டு வந்த பிராந்தியங்களின் ஒன்றிய தீர்வுத் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தலாம்.

விட்டுக் கொடுப்புடன் அரசாங்கமும் செயற்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாவது நாள் விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.மேலும் அவர் குறிப்பிட்டவை வருமாறு –

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் இருந்து இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஆரம்பமானது.

படிப்படியாக ஆரம்பமான இனப் பிரச்சினை இறுதியில் 30 வருட கால யுத்தத்தை தோற்றுவித்தது, யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர அரசாங்கம் கடன் பெற்று கடன் சுமையை அதிகரித்தது, இதனால் இன்று முழு நாடும் வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. இனப்பிரச்சினை இருக்கும் வரை நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தப்பட வேண்டும். நியாயமான தீர்வு ஊடாகவே நிலையான தீர்வு காண முடியும். தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கப் பல நட வடிக்கை எடுக்கப்பட்டு, அதிக நிதி செலவிடப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அது இன்றும் இருக்கிறது. 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தான் அரசி யல் தீர்வை வழங்குவேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அதனை நாங்களும் எதிர்பார்த்துள்ளோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மீண்டும் தெரிவுக்குழு, ஆணைக்குழு அமைத்து நிதியை செலவு செய்யாமல், முன்னாள் ஜனாதிபதி பண்டாரநாயக்க முன்வைத்த பிராந்தியங்களின் ஒன்றியத் தீர்வு திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தலாம். விட்டுக் கொடுப்புடன் அரசாங்கமும் செயற்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் பிரச்சினை களுக்கு தீர்வு காண அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை, திருக்கோணேச்சர ஆலய விவகாரத்துக்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால் ஒன்றிணைந்து தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியல் தீர்வு அவசியம், இதற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு தொடர்பான கட்டணங்கள் அதிகரிப்பு!

கடவுச்சீட்டு தொடர்பான அனைத்து கட்டணங்களும் வியாழக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி சாதாரண சேவைக்காக அறவிடப்பட்ட 3ஆயிரத்து 500 ரூபா என்ற கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு நாள் சேவைக்கான கட்டணம் 15 ஆயிரம் ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் திங்கட்கிழமை முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட பிரேரணையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# ஏற்கெனவே முன்வைத்த கோரிக்கைகளுக்கு உடனடியாகவே நடவடிக்கைகளை எடுக்குக!

## கனேடியத் தமிழர் பேரவை இலங்கை அரசுக்கு வலியுறுத்து

2022 ஓகஸ்ட் மாதத்தில் கனேடிய தமிழர் பேரவை உட்படப் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியதைத் தொடர்ந்து காத்திரமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கனேடிய தமிழர் பேரவை இலங்கை அரசைக் கேட்டிருந்தது.

இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் எவையும் காணப்படாமையால் இலங்கை அரச தலைவர்கள், அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் கனேடிய தமிழர் பேரவை மீண்டுமொரு தடவை தனது கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கை அரசிடம் முன்வைத்த 10 அம்சக் கோரிக்கைகளாவன –

அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் அனைத்து தனியார் காணிகளையும் விடுவிப்பதோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் சட்டவிரோத நில ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கை அரச நிர்வாகத்தின் கெடுபிடிகளின்றி அனைத்து தமிழர்களும் உயிர் மாய்த்த தமது உறவினரை நினைவுகூர அனுமதிக்க வேண்டும்.

பலாலி விமான நிலையத்தைப் பாவனைக்கு திறந்து விடுவதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை அனுமதித்து வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கு இடமளிக்க வேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார மையத்தை யாழ். மாநகர சபையிடம் கையளிக்க வேண்டும்.

2021 இல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் 46/1ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் மாகாணசபைத் தேர்தல்களையும் விரைவில் நடத்த வேண்டும்.

நாட்டின் இதர பாகங்களிலும் நடைமுறையில் உள்ள அதே தரத்தில் அமையும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பாதுகாப்பு நிர்வாகம் சீர்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் தேவைக்கும் அதிகமான படையினரைக் குவிக்காமல் இதர மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரின் எண்ணிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் படைப் பரம்பல் இருக்க வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வியாபார நடவடிக்கைகளை (பண்ணைகள், உணவகங்கள்,வெதுப்பகங்கள்) நிறுத்த வேண்டும். இந்த வியாபாரப் போட்டிகளால் உள்ளூர் விவசாயிகளும் வியாபாரிகளும் கடும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

மன்னார் மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்குப் பயணங்களை மேற்கொள்ளும் வகையில் கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.

அத்தோடு இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவரவேண்டும் என கனேடிய தமிழர் பேரவை இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

# நயினை நாகபூசணி அம்மன் ஆலய நிதி பங்களிப்பில் யாழ்.போதனாவுக்கு புதிய மருத்துவ உபகரணங்கள்!

யாழ்ப்பாணம், நவ. 19

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு புதிய மருத்துவ இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையின் எலும்பு முறிவு சத்திர சிகிச்சைப் பிரிவின் தேவைக்காக, ஒன்பது லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கொள்வனவு செய்யப்பட்டன.

உபகரணத்தை கொள்வனவு செய்யத்தேவையான நிதியை, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையால், வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தாவிடம் கடந்த 17ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

இதற்கமைய யாழ் போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கூடத்துக்காக புதிய இயந்திர உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.





# இந்திய கடற்றொழிலாளரின் மீன்பிடி உரிமையை இலங்கைக் கடற்படை தொடர்ந்தும் மீறுகின்றது!

## மு.க.ஸ்டாலின் காட்டம்



இந்தியக் கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை, இலங்கை கடற்படை தொடர்ந்தும் மீறுவதாகத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது, இந்திய தேசத்துக்கு சவாலாகத் தோன்றுகிறது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2022 நவம்பர் 16 ஆம் திகதி 14 தமிழக கடற்றொழிலாளர்களைக் கைது செய்து, அவர்களின் இயந்திர படகை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தமை தொடர்பிலேயே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தமிழக கடற்றொழிலாளர்கள், அடிக்கடி சிறைபிடிக்கப்படுவதும் அவர்களின் படகுகள் கைப்பற்றப்படுவதும் படகுகளை இலங்கை கடற்படை சேதப்படுத்துவதும் மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சிதைத்துவிட்டதாகத் தமிழக முதல்வர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது தமிழகத்தின் 100 படகுகள் இலங்கை வசம் உள்ளன எனவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொற்று நோய்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்!

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



நாட்டில் கட்டுப்படுத்தப்பட்ட பல தொற்று நோய்கள் மீண்டும் தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொற்று நோய்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நாட்டில் பரவலாகக் காணப்பட்ட பல தொற்று நோய்களை நாம் ஒழித்துள்ளோம். எம்மால் மலேரியா, அம்மை நோய்கள் மற்றும் தொழு நோய்கள் போன்றவை கட்டுப்படுத்தப்பட்டன.

இதேவேளை காசநோய் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படுவதில்லை. இதன் காரணமாக நோயை அடையாளம் காண்பதற்கு தாமதம் ஏற்படுகிறது.

இந்நிலையில் இது போன்ற நோய்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# பிறந்தநாள் கொண்டாடும் மஹிந்தவை நேரில் வாழ்த்திய சீனத் தூதர்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சீனத் தூதுவர் குய்சென்ஹாங் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துள்ளார்.

அத்தோடு, பிறந்த நாள் கொண்டாடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சீனா சார்பாக பிறந்தநாள் வாழ்த்தையும் தெரிவித்துள்ளார்.

இதன்போது, சீனத்தூதுவருக்கு நன்றி தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேணப்பட்டு வரும் வலுவான உறவுகளையும், நீண்டகால நட்புறவையும் இதன்போது நினைவு கூர்ந்தார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** ராஜீவ் காந்தி கொலையில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் அறுவருக்கும் இந்திய உச்ச நீதிமன்றம் விடுதலை அளித்தது பற்றி, சரியென்றும், பிழையென்றும் பலவிதமான அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** ராஜீவ் காந்தி கொலை, ஈழத்தமிழினத்தின் மேல் விழுந்த ஒரு கறுப்புப்புள்ளி. இன்று விடுதலை செய்யப்பட்டிருக்கும் அறுவரும் அக் கொலையில் தொடர்புபட்டவர்கள் எனச் சொல்லித் தண்டிக்கப்பட்டார்கள். பின்னாட்களில் அக் கொலை பற்றி விசாரித்த பலரும்கூட, வேறுவேறு விதமான செய்திகளை வெளியிட்டு, நடந்த உண்மை பற்றிக் குழப்பம் ஏற்படுத்தினார்கள். இன்றுவரை அக் கொலையின் மூல காரணர்கள் தண்டிக்கப்படவில்லை என்பதுதான் பலரதும் கருத்தாக இருக்கிறது. அமெரிக்காவின் CIA இல் தொடங்கி, காங்கிரஸ் கட்சியின் சில உறுப்பினர்கள் வரை பலர் மீதும் இக்கொலையின் நிழல் படிந்திருப்பதாகச் சொல்கிறார்கள். பெரிய இடத்து விவகாரம். உண்மைகள் எங்கெங்கே ஒளிந்திருக்கிறதோ யாரறிவார்?

எது எப்படியோ, அகப்பட்டுப் போனவர்களில் இந்த அறுவரும் அடங்குவார்கள். இளமையோடு சிறைக்குள் சென்றவர்கள், முதுமையின் வாசல் தொட்டு இன்று வெளிவந்திருக்கிறார்கள். இக்கொலையோடு அவர்களுக்குத் தொடர்பிருந்தால் அது பெரும் குற்றம்தான்! ஆனாலும் இத்தனை ஆண்டுகள் அவர்களைச் சிறைக்குள் வைத்திருந்தமை நிச்சயம் சரியான விடயம் அல்ல. அதனை உச்சநீதிமன்றமே உறுதி செய்திருக்கிறது. குற்றவாளிகளைத் திருத்துவதற்காகவே தண்டனைகள் வழங்கப்படுகின்றன. பழி வாங்குவதற்காக அல்ல. அந்த வகையில் உச்சநீதிமன்றத்தின் முடிவு சரியானதாகவே எனக்குப் படுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரின் கருத்து சரிதானுங்கோ.**

**2. கேள்வி:-** 'பாண்டேட்' பற்றிய உங்களது பதில் இங்கு ரொம்பப் பிரசித்தமாகிவிட்டது. பலர் அதுபற்றிப் பாராட்டுகிறார்கள். அதைவிடப் பலர் உங்களைத் திட்டித் தீர்க்கிறார்கள். அவற்றையெல்லாம் பார்த்திருப்பீர்கள். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில்:-** 'பாண்டேட்'பற்றிய எனது பதிலைப் படித்துவிட்டு, நீங்கள் சொன்னாற்போல் என்மேல் ஒருபுறம் பாராட்டு மழை பொழிகிறது. இன்னொரு புறம் வசைமழை பொழிகிறது. 'ஈழத்தின் சங்கி' என எனக்குப் புதிய பட்டமொன்றினையே சிலர் தந்துவிட்டார்கள். எனக்கென்னவோ அப்பட்டம் என்னை இழிவு செய்யும் பட்டமாய்த் தோன்றவில்லை. அதனால், இனி வரும் எனது நிகழ்ச்சி அழைப்புக்களில், அந்தப் பட்டத்தையும் போட்டுக் கொண்டால் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**3. கேள்வி:-** தமிழ்நாட்டிலிருந்து உங்கள் கேள்வி பதில்களைப் படித்து வருகிறேன். பல விடயங்களில் உங்களோடு எனக்கு உடன்பாடு உண்டு. மரபு எல்லைகளை உடைத்து ஆழமாய்ச் சிந்திக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உங்களை ஓர் 'ஆன்மீகவாதியாய்' அறிவிப்பதில்த்தான் எனக்குப் பிரச்சினையாய் இருக்கிறது. பல விடயங்களில் முற்போக்காய்ச் சிந்திக்கும் நீங்கள், ஒரு 'பகுத்தறிவுவாதியாய்' இருப்பதுதானே பொருத்தம். கடவுள் நம்பிக்கையெல்லாம் உங்களுக்குத் தேவைதானா? சமூகசிந்தனை மிக்க நீங்கள், தமிழினத்தின் உயர்வுக்கு வழிவகுத்த எங்கள் 'பெரியாரை'ப் பின்பற்றுகிறவராக அல்லவா இருக்கவேண்டும். அதைவிட்டுவிட்டு ஆன்மீகவாதியாய் இனங்காட்டி ஏன் பலரிடம் அடிவாங்குகிறீர்கள்?

**பதில்:-** ஆழமான கேள்விகளைக் கேட்டு, பதில்களை நீளமாய்ச் சொல்ல வைத்து விடுகிறீர்கள். வாசகர்களுக்கு அவை சலிப்புத் தந்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

இனி உங்கள் கேள்விக்கு வருகிறேன். ஆத்திகம் தான் எனது கொள்கை! இதனைப் பகிரங்கமாக நான் அறிவிக்க விரும்புகிறேன். இதனை நான் சொன்னதும் உடனே சிலர் தங்கள்பாட்டுக்குக் கற்பனை பண்ணிக் கொண்டு, நான் அந்தக் கட்சியை ஆதரிக்கிறேன், இந்தக் கட்சியை எதிர்க்கிறேன் என்றெல்லாம் கூறி என்னைத் திட்டத் தொடங்கிவிடுகிறார்கள். அதற்கு நான் என் செய்ய?

முதலில் அத்தகையோருக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் எந்தக் கட்சியைச் சார்ந்தவனும் அல்லன். எந்தக்கட்சியின் எதிரியும் அல்லன். என் மனதிற்குச் சரியென்று படுகிற, உலகத்திற்கு நன்மை தருகிற கருத்து எதுவானாலும், அதை எவர் சொன்னாலும் அதனை ஆதரிக்க நான் தயங்கமாட்டேன். குறித்த கட்சிகளைச் சார்ந்து நிற்கும் சிலருக்கு அது பிடிக்காமல் போகிறது. அதற்கு நான் என்ன செய்யட்டும்?

நாத்திகம் பேசுவோரை நான் வெறுப்பது உண்மைதான். அங்ஙனம் நான் அவர்களை வெறுப்பது, அவர்கள் கடவுளைக் கும்பிட மறுக்கிறார்கள் என்பதற்காக அல்ல. பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, பல உண்மைகளைத் தரிசித்த நம் மூதாதையரின் ஆழ்ந்த கொள்கைகளை நிந்தனை செய்கிறார்கள் என்பதற்காகவே.

நாத்திகர்களின் இறை மறுப்புக் கொள்கையையே நான் எதிர்க்கிறேன். அவர்கள் சார்ந்த கட்சிகளை அல்ல. நம் மூதாதையர்களின் நம்பிக்கையை இழிவு செய்து, நம் இளையோரைப் பிழையாய் வழிநடத்தும் அவர்களோடு நான் முரண்படாமல் இருப்பது எங்ஙனம்?

நாத்திகர்கள், தாம்தாம் அறிவாளிகள் என்றும், தம்மை ஒத்துக்கொள்ளாத அத்தனைபேரும் மூடர்கள் என்றும் நினைத்தும், பேசியும், எழுதியும் வருகிறார்கள். விஞ்ஞானத்தைத் தமக்கு அரணாக்கிக் கொண்டு, பழமைக் கருத்துக்களை நிராகரித்து, இவர்கள் செய்யும் வாதங்கள் உண்மைக்குப் புறம்பானவை. தர்க்கரீதியாக இவர்களை யாராவது கேள்வி கேட்டால், அவர்களை இனத் துரோகிகளாகவோ மூடர்களாகவோ உலகிற்குக் காட்டி தாம் தப்பித்துக் கொள்கிறார்கள். அல்லது தம் 'கைப்பலத்தைக்' காட்டி அடக்க நினைக்கிறார்கள். இது தான் இவர்களது பாணியாக இருக்கிறது.

இவர்கள், தமக்குத் தாமே 'பகுத்தறிவாளர்கள்' எனப் பட்டமும் சூட்டிக்கொள்வதுதான் பெரிய வேடிக்கை. உண்மையில் 'பகுத்தறிவு வாதிகள்' எனும் பெயர், ஆன்மீக வாதிகளுக்கே பொருத்தமான பெயர். இவ்வுலகியற்கையைப் பகுத்து அறியும் ஆற்றலுள்ள எவரும், தமக்கு மேலே ஒரு சக்தி இருப்பதையும், அச் சக்தியே இவ்வுலகை இயக்குவதையும் நிச்சயம் நம்புவார்கள். அதனால் அச் சக்தியை நம்புகிற ஆன்மீக வாதிகளே உண்மையான பகுத்தறிவு வாதிகள் என்பது என் கருத்து.

காட்சிக்கு வராத கடவுள் என்ற ஒரு பொருள், இல்லை என்று இவர்கள் வாதிடுகிறார்கள். அப்படியானால், தமக்கு உயிரில்லை, அறிவில்லை என்பவற்றையும் இவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டி வந்துவிடும். இதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? இந்த ஒரு வாதத்தை வைத்தே இவர்களின் கடவுள் மறுப்புக் கொள்கை பிழையானது என நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவர்களை விட ஆயிரம் மடங்கு அறிவாற்றலும் அனுபவமும் மிகுந்த நம் மூதாதையர்களே, கடவுள் என்கின்ற சக்தி ஒன்று இருப்பதை நமக்கு இனம் காட்டினார்கள். அவர்களது பேரறிவு எங்கே? இவர்களது சிற்றறிவு எங்கே? அப்படியிருக்க அவர்களது கருத்தை நாம் எப்படி ஏற்காதிருக்க முடியும்?

விஞ்ஞானக் கருத்துக்களே மாற்றமில்லா ஆதாரங்கள் எனக் கருதும் இவர்களுக்கு விஞ்ஞானமும் சரியாய்த் தெரியவில்லை என்பதுதான் உண்மை. புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் கருவிகள் நுண்மைப்பட, நுண்மைப்பட விஞ்ஞானக் கருத்துக்கள் நாளாந்தம் மாறிக் கொண்டு வரும் உண்மையை இவர்கள் ஏனோ உணரத் தவறுகிறார்கள். இவையெல்லாம் நமக்குக் கேடானவை என நேற்றுச் சொன்னவற்றை விஞ்ஞானம் இன்று அவையே நல்லவை எனச் சொல்லிக்கொண்டு இருக்கிறது. இதுதான் விஞ்ஞான அறிவின் நிலை.

எண்களில் ஒன்றாகக் கருதப்படும் பூச்சியத்தின் பெறுமதி என்ன? ஆகாயம் ஒரு பொருளா? இல்லையா? பொருளானால் அதன் எல்லைகள் எங்கே? பொருள் இல்லையானால், அதில் இவ் அண்டங்கள் எப்படி நிலைத்து நிற்கின்றன? இப்படியாய், விஞ்ஞானத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் எத்தனையோ கேள்விகள் இன்றும் இருப்பது இவர்களுக்குத் தெரிவதில்லை.

கடவுளைக் கும்பிட மறுக்கிறார்கள் என்பதற்காக நான் நாத்திகர்கள் மீது கோபப்படவில்லை. அவர்கள் தமிழினத்தின் அறிவார்ந்த மூதாதையர்களை நிராகரிக்கிறார்கள் என்பதாலேயே கோபப்படுகிறேன். தொல்காப்பியர் முதல் பாரதியார் வரையிலான நம் இனத்தின் அறிவாளிகள் எல்லோரும் கடவுள் நம்பிக்கையை அங்கீகரித்திருக்கின்றனர். நமது தமிழ் இலக்கியங்களில் அரைவாசிக்கு மேலானவை, இறைநம்பிக்கையை ஏற்றுக்கொண்டு ஆக்கப்பட்டவையே! இவர்கள் எல்லாம் முட்டாள்கள், தாங்கள் மட்டும்தான் அறிவாளிகள் என்கிறார்கள். இவர்களை என்னென்பது?

நம் மூதாதையர்கள் எல்லாம் முட்டாள்கள், நாம் மட்டும் அறிவாளிகள் என்ற கூற்றைவிட வேடிக்கையான கூற்று ஒன்று உண்டா? விதையில் இல்லாதது முளையில் வந்ததாம். இது நல்ல வேடிக்கைதான். நம் மூதாதையர்கள் முட்டாள்கள் எனச் சொன்னால் நாமும் முட்டாள்களாவோம் என்பது கூட இவர்களுக்குத் தெரியவில்லை. இவர்களின் பகுத்தறிவை (?) என்ன சொல்ல?

இவர்களின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் நம் தமிழ்ப் புலவர்களையெல்லாம் நாம் நிராகரிக்கவேண்டும். பல பெறுமதிமிக்க தமிழ் இலக்கியங்களைநாம் கொளுத்தித்தள்ளவேண்டும். முன்னைய தமிழ் அரசர்களால் அமைக்கப்பட்ட, தமிழினத்தின் பெருமைச் சின்னங்களான ஆலயங்களை எல்லாம் இடித்துத் தள்ளவேண்டும். நாம் வணங்கிப் போற்றும் அடியார்களையும் ஆழ்வார்களையும் இனப்பிரஷ்டம் செய்யவேண்டும்.

இவற்றையெல்லாம் செய்தால், அது தமிழையும் தமிழினத்தையும் நாமே அழித்ததாக ஆகாதா? நம் தமிழினம் அடையாளம் இழந்து போகாதா? இவையெல்லாம் அழிந்து போனால் தமிழரது கலாசாரமும் பண்பாடும் தொலைந்து போகாதா? கேள்விகள் பதற வைக்கின்றன.

(15ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும் வாய்ப்பை வரவு - செலவுத் திட்டத்தால் நாடு இழந்திருக்கிறது!

## செல்வம் எம்.பி. நாடாளுமன்றில் காட்டம்



தமிழ் மக்கள் தரப்பிலே இந்த வரவு – செலவுத் திட்டம் என்பது நாட்டின் பொருளாதாரத்தை மீட்கின்ற ஒரு செயற்பாடாக இருக்குமென்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், இப்பொழுது பார்க்கின்றபோது அந்த நம்பிக்கையை மட்டுமல்ல பொருளாதார ரீதியிலே முன்னேற்றமடைகின்ற வாய்ப்பையும் நாடு இழந்திருக்கிறதா? என்ற கேள்வியை நான் இங்கு கேட்க விரும்புகின்றேன்.

2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் 2 ஆவது மதிப்பீட்டின் விவாதத்தில் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஒவ்வொரு வரவு – செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பிற்காகக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம். ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கின்றபொழுது வடக்கு, கிழக்கிலே தமிழ் மக்களுடைய நிலங்களை அபகரிக்கின்ற விடயம் மற்றும் பாதுகாப்பிற்கு நிதி தேவையென்று சொல்கின்ற விடயம் ஆகிய இந்த இரண்டு விடயங்களும் ஒன்றுடனொன்று ஒத்துப்போகின்ற ஒரு நிலை காணப்படுகிறது.

இந்த நிதி எதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? என்ற கேள்வி ஒரு பக்கம் இருக்க, முப்படைகளுக்கென பல ஏக்கர் கணக்கிலே நிலங்களைப் பறிக்கின்ற அல்லது நிலங்களை எடுக்கின்ற, இந்த நாட்டிலே இல்லாதவொரு விடயத்தை விமர்சித்து இராணுவத்துக்கும் முப்படைகளுக்கும் நிலங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற இரண்டு வகையான விடயங்களையும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய ஒரு நிலைப்பாட்டில் எங்களுடைய மக்களும் நாங்களும் இருக்கிறோம். அந்த வகையில் நாங்கள் அச்சத்தில்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பிரதேசத்திலே கடற்படையினர் நிலங்களை அபகரிக்கின்ற நிலையில், மக்கள் அங்கு போராட்டங்களை மேற்கொள்ளுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இராணுவத்துக்கும் முப்படைகளுக்கும் என வடக்கு, கிழக்கிலுள்ள பொதுமக்களின் காணிகளை எடுக்கின்ற திட்டமிட்ட ஒரு செயற்பாடு இன்றைக்கும் இருந்துகொண்டு இருக்கின்றது. இது ஏன்? என்ற கேள்வியை நான் இங்கு கேட்க விரும்புகின்றேன். இன்று நாட்டில் போர் என்பது இல்லை.

இந்தியா உட்பட வெளிநாடுகளிலிருந்து எங்களுடைய மக்கள் மீண்டும் நாட்டுக்கு வர இருக்கின்ற சூழ்நிலையிலே ஏன் முப்படையினர் கூடுதலான காணிகளை அபகரிக்கின்றனர்? நாங்கள் பயணம் செய்கின்றபோது வழிகளிலே பல ஏக்கர் காணிகளில் முப்படைகளுக்கான முகாம்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எங்களுடைய மக்களின் விவசாய நிலங்களை அபகரித்து இராணுவத்தினர் அதில் விவசாயம் செய்கின்றனர். அங்கே சலூன், சாப்பாட்டுக் கடைகள் போன்றவற்றை அமைத்து இராணுவம் சம்பாதிக்கின்ற நிலையே தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது.

எதற்காக எங்களுடைய நிலங்களை படையினர் அபகரிக்கின்றனர் என்ற கேள்வியை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். முப்படைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒன்பது லட்சம் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அவர்களுடைய குடும்பத்தினரைக் கொண்டுவந்து அவர்களால் பிடிக்கப்பட்ட காணிகளுக்குள் விட்டால்கூட அது அடங்காது. அந்தளவுக்கு இந்த நாட்டிலுள்ள முக்கால் பங்கு நிலங்களை முப்படையினர் அபகரித்து வைத்திருக்கிறார்கள். இந்த விடயத்திலே சிங்களப் பிரதேசங்களில் என்ன நடக்கின்றது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், தமிழ்ப் பிரதேசத்திலே கூடுதலான நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இன்றைய வரவு – செலவுத் திட்ட விவாதத்திலே நாங்கள் அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த வரவு – செலவுத்திட்டத்திலே பாதுகாப்புக்காக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருப்பதால் அதற்கான வாக்கெடுப்பு வரும்போது நாங்கள் அதை எதிர்ப்போம் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு எங்களுடைய இலங்கை நாட்டிலே விவசாயத்துறை, கடற்றொழிற்றுறை, பெருந்தோட்டத்துறை ஆகியன பிரதான தொழிற்றுறைகளாகும். அதிலே, மலையகத்திலே உள்ள பெருந்தோட்டத்துறை அதிக வருவாயை ஈட்டித்தருகின்ற தொழிற்றுறையாகும். அவற்றுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குறை உள்ளது.

அப்படியிருந்தும், மலையகப் பெருந்தோட்டத்துறைக்கு நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஏன் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதை இந்தச் சபையிலுள்ளவர்களும் நிதி அமைச்சரும்தான் தெரியப்படுத்தவேண்டும். அதற்காக நான் இந்தச் சந்தர்ப்பத்திலே எங்களது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்துறையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஒரு முடிவை எடுத்திருக்கின்றது. எங்களுடைய கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கே இருக்கின்றார். அவர் வவுனியாவிலே நடந்த ஒரு கூட்டத்திலே, வனவளத் திணைக்களம் அல்லது வேறு திணைக்களங்கள் பிடித்து வைத்திருக்கின்ற உளுந்துப் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய காணிகளை விடுவிக்குமாறும் அந்த நிலத்திலே உளுந்து அல்லது ஏனைய சிறு பயிர்களைப் பயிரிடுவதனூடாகப் பெருந்தொகையான வருவாயை ஈட்ட முடியும் என்றும் வெளிப்படையாகப் பேசியிருந்தார். இதை நம்பி பல விவசாயிகள் சிறு காடாக இருந்த அந்தக் காணிகளில் தங்களின் முதலீடுகளை இட்டு உழுதார்கள். அவ்வாறு உழுத நிலத்தில் உளுந்து விதைக்க முற்படுகின்றபோது அங்கே வந்த வனவளத் திணைக்களத்தினர் அதில் தலையிட்டு தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த விவசாயிகளைத் தடுத்துநிறுத்தி அந்தக் காணிகளில் மரங்களை நட்டனர்.

அமைச்சர் அவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோது, அரசாங்கத்திற்குக் கீழே இருக்கின்ற வனவளத் திணைக்களம் ஏன் இப்படி நடக்கிறது? இந்தத் திணைக்களம் இந்த நாட்டை முன்னேற்றுவதற்காகச் செயற்படவில்லையா? அவர்களுடைய தனிப்பட்ட செயற்பாடுகளால்தான் இவ்வாறான விடயங்கள் நடைபெறுகின்றனவா?

உண்மையிலே எங்களுடைய தொல்பொருள் திணைக்களம், தொல்பொருள் ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டு, பௌத்த விகாரைகளை அமைப்பதையும் நிலங்களை ஆக்கிரமிப்பதையும்தான் செய்கின்றது. இன்றைக்குக் குருந்தூர்மலைப் பகுதியிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 600 ஏக்கர் விவசாய நிலங்களை அபகரிக்கின்ற ஒரு முயற்சியை அந்தத் திணைக்களத்தினர் செய்கின்றார்கள். எங்களுடைய விவசாயிகள் அங்கே தொடர்ந்து விவசாயத்தைச் செய்து வந்திருக்கின்றார்கள். பொருளாதாரத்தை மீட்கின்றோம் என்கிறீர்கள்! ஆனால், இங்கிருக்கின்ற விவசாயிகளுடைய நிலைமை படுமோசமாக இருக்கின்றது.

எனவே, விவசாய அமைச்சர் இதிலே கவனம் செலுத்தவேண்டும். இந்தத் திணைக்களங்களுடைய ஆதிக்கத்தை நீங்கள் நிறுத்தவேண்டும். ஜனாதிபதியிடமும் நான் இந்தக் கோரிக்கையை விடுக்கின்றேன். இந்தத் திணைக்களங்களுடைய ஆதிக்கத்தை ஜனாதிபதியும் அமைச்சர்களும் அனுமதிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

இன்றைக்கு விவசாயிகளுக்குப் பசளை கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இப்பொழுது மழை கூடுதலாகப் பெய்திருக்கின்றது. மேலும், விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, கூடுதலான வருமானத்தை ஈட்டுகின்ற தொழிலாக விவசாயம் இருக்கின்ற நிலையிலே, இன்றைக்கு அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி, பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட மிகக் குறைவாக இருக்கின்ற சூழலிலே எப்படி இந்த நாடு பொருளாதாரத்தில் மீண்டெழப் போகின்றது? என்ற கேள்வி எழுகின்றது.

அடுத்து அதிக வருமானத்தை ஈட்டுகின்ற கடற்றொழில் அமைச்சுக்கு வெறும் 600 கோடி ரூபாதான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு 840 கோடி ரூபாதான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு நல்ல தண்ணீரைப் பெற்றுக்கொள்வது என்பது பாரிய பிரச்சினையாக மாறும் என்று இன்றைக்கு நாங்கள் சொல்கின்றோம். ஆகவே, இப்பொழுதே வேலைத்திட்டங்களை ஆரம்பித்தால்தான் அந்தத் தண்ணீர்ப் பிரச்சினையை எதிர்காலத்தில் நாங்கள் தீர்க்க முடியும்.

ஆகவே, நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு 840 கோடி ரூபாவை ஒதுக்குகின்ற நிலை ஏன்? என்று கேட்கின்றோம். இது சம்பந்தமாக அரசாங்கம் திட்டமிடவில்லையா? விவசாயத்தோடு சேர்ந்து போகின்ற ஒரு விடயம்தான் நீர்ப்பாசனம். தண்ணீரைப் பயன்படுத்துகின்ற அல்லது நல்ல தண்ணீரைப் பெறுகின்ற செயற்பாட்டில் ஈடுபடுவது இந்த நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கடமையாகும். தண்ணீர் விடயத்திலே அரசாங்கம் ஏன் இந்த மெத்தனப் போக்கைக் காட்டுகின்றது?

எமது நாட்டில் பாரிய துறையாக விளங்கும் கடற்றொழிலில் மீனுற்பத்தி என்பது பாரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற ஒரு தொழிற்றுறையாகும். அந்த அமைச்சுக்கு 600 கோடி மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இது அதிசயமாக இருக்கின்றது. இராணுவத்துக்கு இதைவிட எவ்வளவோ தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அன்றாடம் வருமானத்தை ஈட்டுகின்ற, கஷ்டப்படுகின்ற எங்களுடைய விவசாயிகள், மீனவச் சமூகம், பெருந்தோட்ட மக்கள் ஆகியோர் மீது கவனிப்பாரற்ற ஒரு சூழலை இந்த வரவு – செலவுத் திட்டம் கொண்டிருக்கின்றது என்ற குற்றச்சாட்டை நான் முன்வைக்கின்றேன்.

ஜனாதிபதி, நிதியமைச்சராக இருப்பதால் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இன்றைக்குக் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 600 கோடி ரூபா நிதியிலிருந்து அது எதைச் சாதிக்கப்போகின்றது? மண்ணெண்ணெய் இல்லாமல் இன்றைக்கு எங்களுடைய கடற்றொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். மண்ணெண்ணெய் 300 ரூபா! அதனால் கடலில் அதிக தூரம் சென்று மீன்பிடிக்க முடியாது. அன்றாடம் எங்களுடைய மக்கள் மிகக் கூடிய விலை கொடுத்து மீனை வாங்கி உண்ணுகின்ற ஒரு கஷ்டமான சூழ்நிலை இருக்கின்றது. இன்றைக்கு பாணின் விலை 200 ரூபா!

மண்ணெண்ணெய் தட்டுப்பாடான சூழ்நிலையில் கடற்றொழில் அமைச்சுக்கு 600 கோடி ரூபாக்களை ஒதுக்குகின்றபோது, எங்களுடைய கடற்றொழிலாளர்கள் எப்படித் தங்களுடைய தொழிலை மேம்படுத்துவார்கள்? அவர்களால் தொடர்ச்சியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாதுள்ளது. இந்த நிலையில், வறுமையிலிருந்து மீண்டெழுகின்ற ஒரு நிலையை அவர்கள் விடயத்தில் எப்படி ஏற்படுத்தமுடியும்? என்ற கேள்வியைக் கேட்கின்றேன். இன்றைக்கு எங்களுடைய மீனவச் சமூகத்துக்கு எந்தவொரு சலுகையும் இல்லை. அவர்களுடைய பிள்ளைகளின் மேம்பாட்டுக்கு, அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு இந்த வரவு செலவுத்திட்டத்தில் எவையும் இல்லை. அந்த வகையில், இந்த வரவு – செலவுத் திட்டம் அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்திருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதி உட்பட ஒட்டுமொத்த ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் பிரதான விடயங்களாக இருக்கின்ற விவசாயம், கடற்றொழில், பெருந்தோட்டத்துறை என்பவற்றிலே கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் உள்நாட்டிலே இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி வருமானத்தை ஈட்டிக்கொள்ள வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் மூலமாக பொருளாதாரத்தை மீட்பதற்கான செயற்பாட்டைச் செய்ய வேண்டுமென்பதற்காக இன்றைக்கு நாங்கள் புலம்பெயர்ந்தோரைக் கூப்பிடுகின்றோம். அவர்கள் இங்கே வந்து முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. இந்த அரசாங்கத்திடமும் அந்த ஆவல் இருக்கின்றது. உள்நாட்டிலேயே கவனிப்பில்லாத ஒரு சூழலை உருவாக்கிவிட்டு வெளிநாட்டிலேயிருந்து வந்து உற்பத்தி செய்யுங்கள் அல்லது பொருளாதாரத்தை மீட்டெடுங்கள் என்று சொல்வது எந்தவிதத்திலே நியாயம்?

விவசாயம், பெருந்தோட்டம் மற்றும் கடற்றொழில் ஆகிய பிரதானமான மூன்று விடயங்களையும் அரசாங்கம் கவனத்திலே எடுக்கவில்லையென்பதை நான் இங்கு மிகக் கவலையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனவே, இவை தொடர்பாகப் பரிசீலிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் முன்வைக்க விரும்புகின்றேன். இந்த விடயத்திலே அமைச்சர் உரிய பதிலைத் தருவார் என்று நான் நினைக்கின்றேன்.

குறிப்பாக, வவுனியாவிலே விவசாயிகள் பலரை அழைத்து அமைச்சர் கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே இந்த விடயத்தை அவர் கவனத்திலே எடுக்க வேண்டுமென்று நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

(13 ஆம் பக்கம் பார்க்க)



சிவசக்தி ஆனந்தன்
செயலாளர் நாயகம்,
ஈழ மக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி

# தொலைநோக்குடன் தேசிய இனப்பிரச்சினையை அணுகிய நாபாவை இன்று நினைவு கூர்வோம்!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவின் 71 ஆவது பிறந்ததினம் இன்று (சனிக்கிழமை) அனுட்டிக்கப்பட உள்ளது. இதனை ஒட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.பத்மநாபாவின் பிறந்த தினத்தை தோழர்கள் தினமாக அனுஷ்டித்து வருகின்றோம். எமது தோழரின் பிறந்த தினமும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தியும் ஒரே தினத்தில் வெவ்வேறு ஆண்டுகளில் பிறந்துள்ளனர். இருவரும் உலக அமைதிக்காகப் போராடி ஏகாதிபத்திய எதிர்ப்பின் காரணமாகவே உயிர்நீத்தவர்கள்.

தோழர் க.பத்மநாபா என்றவுடன் நன்றாக வடிவமைக்கப்பட்ட அவரது தாடியும் மேல்நோக்கி இழுக்கப்பட்ட அவரது முடியும் கவர்ந்திழுக்கும் அவரது காந்தக் கண்களும் மீசை, தாடிக்கு இடையே தவழும் சிரிப்பும்தான் அனைவரின் நினைவிற்கும் வரும். காலம் எமது மக்களுக்கான சிறந்த தலைவனை எம்மிடம் இருந்து பிரித்துவிட்டது. வாழும்போதே வரலாறு படைத்த எமது எஸ்ஜி தோழர் இன்றளவும் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றார். சிறந்த மனித நேயர், அனைவரிடத்திலும் அன்புடன் பழகும் இயல்பு அதிலும் குழந்தைகளைக் கண்டால் அவர்களுடன் தானும் குழந்தையாக மாறிவிடும் பண்பு, அடுத்த முறை அவரைக் கண்டால் அந்த குழந்தை மாமா என்று ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும் கவர்ச்சி இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஒரு தலைவரை இனி பார்ப்பது கடினமே. அந்த ஒப்பற்ற மனிதரின் தலைமையில் நாம் பயணித்தோம் என்று நினைக்கையிலே நாம் பெருமை கொள்கிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் இறுதித் தருணம்வரை அதன் செயலாளர் நாயகமுமாகத் திகழ்ந்த எமது தோழர் க.பத்மநாபா தொலைநோக்குடன் தேசிய இன விடுதலையை அணுகியவர். தேசிய இன விடுதலையுடன் வளர்க்கப் புரட்சியையும் இணைக்க வேண்டும் என்று கனவு கண்டார். இலங்கையில் வர்க்கப் புரட்சி வெற்றியடைந்தால் தேசிய இனப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும் என்றும் அவர் நம்பினார். அதற்காகவே தென்னிலங்கை ஜனநாயக முற்போக்கு சக்திகளுடனும், இடதுசாரிக் கட்சிகளுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணிவந்தார்.

காடையர்களின் துணையுடன் அரச அனுசரணையுடன் தமிழர்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட





தொடர்ச்சியான அடக்குமுறைகளும் வன்முறைகளும் தென்னிலங்கையின் ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் இடதுசாரிக் கட்சிகளையும் தமிழ் மக்கள்மீது அனுதாபம் கொள்ளச் செய்திருந்தன.


அடக்குமுறையின் உச்சகட்டமாக நடந்தேறிய 1983 கறுப்பு ஜீலை தேசிய இனவிடுதலையை துரிதப்படுத்தியது. எனவே, தேசிய இனவிடுதலையை முன்னெடுத்துக்கொண்டே வர்க்கப்போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று தோழர் பத்மநாபாவும் ஏனைய தோழர்களும் எடுத்த முடிவைத் தமிழ்த் தேசிய இனத்தின்மீது கரிசனை கொண்டிருந்த அன்றைய தென்னிலங்கை அரசியல் சமூகமும் ஏற்றுக்கொண்டன. அதனால் அவர் இலங்கையில் கம்யூனிஸ ஆட்சியைக் கொண்டுவர முயற்சிக்கிறார் என்று அன்றைய ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசால் குற்றம் சுமத்தப்பட்டு தேசத்துரோகக் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

தன்னைப் பயங்கரவாதியாகச் சித்திரித்த அரசிற்கு எதிராக துணிச்சலுடன் செங்கோடன், சேரன், ரஞ்சன் என்ற பலபெயர்களுடன் தென்னிலங்கையிலும், மலையகத்திலும் இந்தியாவிலும் புரட்சிக்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். தேசிய இன விடுதலைக்காகப் போராடும் அனைத்து சர்வதேச அமைப்புகளுடனும் நெருக்கமான உறவைப் பேணிவந்தார். சர்வதேச ரீதியில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆதரவை வழங்கியதுடன் அவர்களது போராட்டங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் பங்கெடுத்துக்கொண்டார். நிக்கராகுவா, பாலஸ்தீன விடுதலை இயக்கம், உள்ளிட்ட பல புரட்சிகர அமைப்புகளுடனும் ரஷ்யா, கியூபா போன்ற இடதுசாரி நாடுகளுடனும் கட்சிரீதியான உறவைப் பேணிவந்தார்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியாவைப் பகைத்துக்கொண்டு எத்தகைய முன்னேற்றத்தையும் அடைய முடியாது என்பதிலும், இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்திலும் புவிசார் அரசியலிலும் இந்தியாவின் வகிபாகம் மறுதலிக்க முடியாதது என்பதையும் எமது செயலாளர் நாயகம் நன்றாகப் புரிந்து வைத்திருந்தார். அந்தப் புரிதலின் அடிப்படையிலேயே அன்றைய பனிப்போர் காலகட்டத்தில் இந்தியாவின் பாதுகாப்பும் தமிழர்களின் பாதுகாப்பும் பிரிக்க முடியாதவை என்பதில் உறுதியாக இருந்ததுடன், இந்தியாவின் சிறந்த நண்பராகவும் திகழ்ந்தார். இந்த அடிப்படையில் அவரது தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று ஏற்றுக்கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவான 13 ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தின் கீழ் உருவான மாகாணசபை முறைமையையே இன்று முழுமையாக நடைமுறைப் படுத்துமாறு தமிழ்த் தேசிய பரப்பில் அரசியலில் ஈடுபட்டிருக்கும் அனைத்து கட்சிகளும் கோருகின்றன.

நாம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணசபையை பொறுப்பேற்றிருந்த வேளையில், இலங்கை அரசாங்கத்துடனும் இந்திய அரசாங்கத்துடனும் மாகாணசபை சட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் தொடர்ந்து பேச்சுகளை நடத்திக்கொண்டே பல்வேறு இன்னல்களின் மத்தியில் அதனை முன்னெடுத்துச் சென்றோம். குறுகிய காலப்பகுதிக்குள் எமக்குக் கிடைத்த அதிகாரங்களைக் கொண்டு பல அரிய விடயங்களைச் செய்திருந்தோம் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

அன்றைய பூகோள அரசியல் நிலைமையைப் போன்றே இன்றும் ஓர் அரசியல் சூழல் உருவாகியுள்ளது. ஆனால் அன்று நாம் அரசியல் ரீதியிலும் ஆயுத ரீதியிலும் பலம்பெற்றிருந்தோம். இந்தியாவுடன் நட்பு பாராட்டும் சக்திகளில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பு என்பது இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு என்று விரிவடைந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் இலங்கையின் அமைவிடம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. எனவே, இந்தி



யாவின் பாதுகாப்பும் இந்தோ - பசுபிக் பிராந்திய பாதுகாப்பும் தமிழ் மக்களின் பாதுகாப்பும் இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையும் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, எமது இன்றைய அரசியல் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு எமது பலம், பலவீனம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு, எமது மக்களுக்கான குறைந்தபட்ச அரசியல் தீர்வாக சமஷ்டி தீர்வை அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒருமித்த குரலில் கட்சி பேதமின்றி இதயசுத்தியுடன் வலியுறுத்துவதுடன் அதனை அடைவதற்கு அனைவரும் ஓரணியில் திரண்டு ஐக்கியமாகச் செயற்பட்டு கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும் என்று எமது செயலாளர் நாயகம் க.பத்மநாபாவின் 71 ஆவது பிறந்த தினத்தில் அறைகூவல் விடுக்கின்றோம்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 185

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பிராந்திய, சர்வதேச பார்வை



“2001 ஆம் ஆண்டு அல்ஹைடா அமைப்பு அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தைத் தாக்கியது. இதன்போது உலக வர்த்தக மையம் மற்றும் இராணுவ கேந்திரநிலையமான பென்டகன் ஆகியன தாக்குதலுக்கு உள்ளாகின. இந்தத் தாக்குதலில் கிட்டத்தட்ட 3,000 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தைப் பிரகடனம் செய்தது. சர்வதேச அரசியல் ஒழுங்கானது ஒரே நாளில் மாறிப்போனது. இந்தப் பிரகடனத்தைத் தொடர்ந்து அனைத்து ஆயுத அமைப்புகளையும் ஒரே கண் கொண்டு பார்க்கும் நிலைமை உருவாகியது.

இந்தப் பின்புலத்தில்தான் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் பேச்சு வார்த்தைக்குத் திரும்பியது. திரும்பியே ஆக வேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் சமாதான பேச்சுவார்த்தை ஒருவழி பாதையாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் மீண்டும் தங்களின் பழைய பாதையை நோக்கித் திரும்ப முற்பட்டபோது ஒட்டுமொத்த மேற்குலகமே விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பியது. விடுதலைப் புலிகள் அழிந்து போன கதை இதுதான். மற்றும்படி விடுதலைப்புலிகள் இயக்கத்தை கோட்டாபய ராஜபக்ஷ தோற்கடித்தார், மஹிந்த அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார் என்பவை எல்லாம் அவர்களின் கதைகள். உலகளாவிய அரசியல் சூழல் விடுதலைப் புலிகளுக்கு முற்றிலும் பாதகமாகவும், ஸ்ரீலங்காவுக்கு முற்றிலும் சாதகமாகவும் இருந்தது. இந்தச் சூழலில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஒரு பலமான நாடு இருந்திருக்குமானால் விடுதலைப் புலிகள் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள்.

தெற்காசியாவில் இந்தியாவினால் மட்டுமே அதனைச் செய்திருக்க முடியும். ஆனால், விடுதலைப் புலிகள் இந்தியாவை விரோதித்துக் கொண்டமையால் அது சாத்தியப்படவில்லை. உண்மையில் அருகில் உள்ள ஒரு பலமான நாட்டை விரோதித்துக் கொண்டு, அதிக காலத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாது.”

– நான் மேற்கூறிய பகுதி ‘சர்வதேச அரசியலும் ஈழத் தமிழரின் அரசியலும்’ என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் யதீந்திரா, தினக்குரலில் பதிந்த கட்டுரையின் சிறு பகுதியே. தமிழ் மக்கள் வாழும் தென்னாசிய பிராந்தியத்தில் ஆளுகைக்கான அரசியலையும், அதில் இந்தியா மேலோங்கி நிற்பத்சியும், தமிழ் மக்களது சுதந்திர தமிழீழமோ, தமிழ் தேசமோ, இந்தியாவிற்கு அருகில் இருப்பதால் அதனது ஆளுமையை தமிழீழமோ, தமிழ்தேசமோ, தவிர்க்க முடியாது என்பதைப் புரியாமலோ, புரிந்து கொண்டும் அதை பொருட்படுத்தாது, மக்காது புலம்பெயர் பகுதிகள் பிரபாகரனுக்கு முருகன் அவதாரம் தந்து, போர்முரசம் கொட்டி, ஆர்ப்பரித்து, சூரசம்காரம் செய்ய, அவரை உசுப்பேத்தியதன் விளைவுகளே நடந்தவை. பிரபாகரனுக்கு அவற்றின் விளைவு விளக்கங்கள் குறைவாக இருந்திருக்கலாம். ஆனால் புலம்பெயர் புத்திஜீவிகளுக்கு கடப்பாடு இருந்தது.

போரின் கடைசி நேரங்களிலும், பின்வந்த இன்றுவரையான நாள்களிலும் ‘பாதைகள் மாறலாம், இலட்சியங்கள் மாறாது’ எனவும், சர்வதேசத்தை இராஜதந்திரங்களால் அணுகி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைப் பெறுவோம் என நாட்டின் தமிழ அரசியல்வாதிகளும் புலம்பேர் அமைப்புகளின் தலைவர்களும் கூற்றுக்கள் வைத்தனர். போர் முடிவின் 13 வருடங்களின் பின்னும் இராஜதந்திர முன்னெடுப்புகளால் அல்லது சர்வதேசத்தின் உந்துதல்களாலோ என்னவோ, நாட்டின் அரசியல் தரப்புகள் ஸ்ரீலங்கா அரசுடன்



‘பேச்சுக்கள் வருமா, வராதா’ எனக் காத்திருக்கிறார்கள். அதுபோல புலம்பெயரின் ஒரு முக்கிய பகுதியான ’கனேடிய தமிழ்க் காங்கிரஸ்’, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவைச் சந்தித்து கையளித்த மகஜரை அவர் பரிசீலிக்கலாம் என உறுதி அளித்திருக்கிறார். ஆக, இன்னும் இணக்கத்தின் ஊடாக சிங்கள பேராண்மையிடமிருந்து ஏதாவது பெற்று விடலாம் என்ற எண்ணப்பங்கிலேயே தமிழ் மக்களின் அரசியல் நடக்கின்றது இவற்றில் சர்வதேசத்தின் பங்குகள் தெரிவதில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரும் வழிவகைகளுக்கு பிராந்தியத்தினதும், அது பங்களிக்கும் சர்வதேச அரசியலினதும் புரிந்துணர்வுகளும் வேண்டும் என்ற நோக்கத்திலேயே நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளில் நடந்தவை பற்றி சிறிது விவரமாகப் பதிவிட்டேன்.

எத்தனையோ இணக்கப் பேச்சுக்கள் நடைபெற்றிருந்தாலும், சர்வதேச ஈடுபாட்டுடன் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தில் இடம் பெற்ற பேச்சு வார்த்தைகள் இவை.

நல்லூர் தேரடியில் இருந்து பேசிப் போவோர் (இதுவும் யதீந்திராவின் உவமை) ‘நோர்வே இவர்களைக் கைவிட்டு விட்டது, கவிழ்த்து விட்டார்கள்’ எனக் கூறுவதை விட்டுவிட்டு, யதார்த்தமாகத் தமிழ் பரப்புகளை பிரதிநிதித்துவப்படுத்திய விடுதலை புலிகள் நிலைமைகளைத் தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக மாறவிட்டார்கள் என்பதையும், அதிலிருந்து பிராந்திய, சர்வதேச அரசியலையும் சுய விமர்சனம் செய்து, புரிந்து கொண்டால்தான் வகுக்கப்பட வேண்டிய வேண்டிய பாதைகளும் தெளிவாகும்.

நோர்வேயின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த போரை முடிவுக்கு கொண்டு வந்து, தீர்வு ஒன்று ஏற்படுத்துவதில் தோற்றுப் போனதுதான் என நோர்வேயின் ஆய்வாளர்களே கருத்துகிறார்கள். ஆனால் அதன் தோல்வியின் பெரும் பகுதிகள் தங்களைச் சார்ந்தது அல்ல என்பதும் அவர்களது கருத்து. போரை முற்றுக்குக் கொண்டு வராவிட்டாலும், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை நோக்கிப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க இரு பகுதியினரும் ஒஸ்லோவில் இணக்கம் தெரிவித்தது, சுனாமி நிதிகளை பயன்படுத்துவதற்கான இடைக்கால கட்டமைப்பை உருவாக்கி அதில் கையொப்பமிட்டது போன்ற இடைக்கால நிகழ்வுகள் பேச்சுவார்த்தை காலங்களில் நடந்தன.

இவை நில மட்டத்தில் மக்களிடையே பெருமளவு எதிர்பார்ப்புகளையும் விளைவித்தன. ஆனாலும் அவையெல்லாம் அரசிடமும் அதற்கு எதிரானவர்களிடமும் இருந்த அவரது நோக்கங்களிலும் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஓரளவு அவர்கள் இருந்த நிலைப்பாடுகளை இன்னும் கடுமையாக்கின. இத்தகைய முயற்சிகள் எல்லாம் இரண்டு பகுதிகளாலும் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிழல்களோடு தான் நடந்தன. ஆனால் அந்த நிழல்கள் நிஜமாகி, பின் போராக மாறி, விடுதலைப் புலிகள் மே 2009 தோற்கடிக்கப்பட்டதில் முடிவுற்றது. நிழல் யுத்தத்தின் ஏற்பாடுகளுக்கு முக்கிய காரணியாக இருந்தது தென்னிலங்கை ஒற்றை ஆட்சியை விட்டுக் கொடுக்க தயாராகவில்லை என்பது. ஆகக் கூடிய பட்சம் சில அதிகாரப் பரவல், உதட்டளவில் மாத்திரம் சமஷ்டி என்ற பேச்சு என்பதுதான்.

விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட தயாராகவில்லை. பிரதேசங்களுக்கான மோதல்கள் இணக்க பேச்சுவார்த்தைகளால் தீர்வுக்குக் கொண்டு வருவது என்பது மிகக் கடினமானது. பிரதேசக் கோரிக்கைகள் இந்த பேச்சு வார்த்தைகளில் முக்கிய பங்கு வகித்தன என்பது மட்டுமல்லாமல், பிரதேசவாதங்களுக்கு அனுசரணையாளர்கள், ஆதரவாளர்கள் பலர் இருந்தனர். அவை இவற்றில் நோர்வே போன்ற வெளிநாட்டவர்களை எதிர்த்ததால் ஏற்பட்டு வந்த சிறிய சந்தர்ப்பமும் நாட்டினதும் பிராந்தியத்தினதும் சர்வதேசத்தினதும் அரசியல் வட்டங்களில்தான் தங்கி இருந்தது. ஆனால் அதுவும் குறுகிய கால கட்டங்களில் தங்களது தேவைகளை ஒட்டி மாற்றங்கள் கண்டு கொண்டிருந்தது. மிக முக்கியமாக 2004 ஆம் ஆண்டு கருணாவினால் விடுதலைப் புலிகளிடையே ஏற்பட்ட பிளவு இரு பகுதிகளிலும் இருந்த இராணுவ சமபலத்தை ஸ்ரீலங்காவின் பக்கம் சரித்தது. அதை அடுத்து ஸ்ரீலங்கா அரசுக்குப் பேச்சு வார்த்தைகளில் தீர்வு அடைய வேண்டும் என்ற நம்பிக்கை குறைந்ததும், பதவிக்கு வந்த அரசாங்கம் தீர்வுகள் ஏற்படுத்தப்பட்டு விடுதலைப் புலிகளின் கைகளில் ஆயுதம் இருந்தால், நாட்டின் பாதுகாப்புக்கு சர்வதேச உத்தரவாதங்கள் தேடினார்கள் .சமாதானத்தை நிலநிறுத்த மேற்கத்திய நாடுகளின் பெரும் தொகைகள் நிதியாக எதிர்பார்க்கப்பட்டன. மேற்கத்திய நிதிகளை தீவிர இடதுசாரிகளும், தேசியவாதிகளும் எதிர்க்க, மேற்கத்திய நாடுகளுடன் இணைந்து இயங்காத மத்திய கிழக்கு, ஆசிய பரப்புகளிடமிருந்து ஆயுதங்களும் பண உதவிகளும் பெறப்பட்டன. இவற்றை அடுத்து மஹிந்த ராஜபக்ஷ ஒரு முனைப்புடன் மேற்கத்தியநாடுகளின் அழுத்தங்களுக்கு பணிந்து போகாது, யுத்தத்தை முனைப்புடன் நடத்தினார்.

ஆகவே ஆயுதமோ, சர்வதேச பலமற்ற சமாதான விரும்பியானதும், மற்ற நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை தனது வெளியுறவுக் கொள்கையாக வகுத்துக் கடைபிடிக்கும் நோர்வேயால் நடக்கும் பிரதேச, சர்வதேச மாற்றங்களை கட்டுப்படுத்த முடியவில்லை. இணக்கங்களை மறுதலிக்கும் தரப்பை ஏதோ ஒரு வழியில் தண்டித்து, இணக்கத்தினை மீள நிறுத்தி, நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகார ஏற்பாடுகள் நோர்வேயிடம் இருக்கவில்லை. அது சர்வதேச நல்லுறவுகளிலேயே இதற்குத் தங்கி இருந்தது. அதற்கான, பிராந்திய சக்தியான இந்தியா தந்த பங்கினை நாளை பார்க்கலாம்.

(வளரும்)....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜி20 நாடுகளுக்கான இந்தியாவின் தலைமைத்துவம் நெருக்கடிகளுக்கு உலக நடுவராக அதை உயர்த்தும்



2023 ஆம் ஆண்டுக்கான ஜி 20 தலைவர் பதவியை இந்தியா இந்தோனேசியாவிடமிருந்து பொறுப்பேற்றமையை அடுத்து அனைத்துக் கண்களும் இந்தியாவின் மீது பதிவாகியுள்ளன, ஏனெனில் புதுடெல்லியானது உலக தெற்கு மற்றும் முன்னேறிய நாடுகளுக்கு இடையே சிறந்த ஒத்துழைப்பின் சூழலை உருவாக்கும் நிகழ்ச்சி நிரலை அமைக்கும் என்பது இருதரப்பினதும் நம்பிக்கை.

உலகளாவிய அமைதி மற்றும் செழிப்பு மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கான நிலையான மற்றும் சமமான வளர்ச்சிக்கான ஒத்துழைப்பாக இந்த நிகழ்ச்சி நிரல் இருக்கும்.

இந்தியாவின் G20 தலைவர் பதவியின்மைய நோக்காக உலக தெற்கில் செழிப்பும் அமைதியும் இருக்கும்.

'வசுதைவ குடும்பம்' அல்லது 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளின் கீழ் இந்தத் தலைமைத்துவப் பதவிக்கான இல்ச்சினை, இணையதளம் மற்றும் நிகழ்ச்சி நிரலை வெளியிட்டு பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய உரையின் தெளிவான முக்கியத்துவம் இதுதான்.

உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 85 சதவீதத்தையும் அதன் மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும் கட்டுப்படுத்தும் மிகப்பெரிய பலதரப்பு தளங்களில் ஒன்றாக, ஜி 20 குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டுள்ளது. குறிப்பாக வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள வளர்ந்த நாடுகளில். குளோபல் சவுத் என்பது லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஓசியானியாவில் வளரும் மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளைக் குறிக்கிறது.

தற்போதைய புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை, பொருளாதார தலையீடுகள் மற்றும் கால நிலை நெருக்கடியின் பாதகமான தாக்கங்களில் பெரும் சக்தி மோதலின் பின்விளைவுகளை எதிர்கொள்ளும் வளரும் நாடுகளினிடையே இந்தியாவின் மீது பெரும் நம்பிக்கை உள்ளது. அடிப்படைப் பொருள்கள் மற்றும் எரிசக்தி பாதுகாப்பிற்கான நம்பகமான விநியோகச் சங்கிலிகளை உருவாக்க ஜி – 20 நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை உறுதி செய்வதில் இந்தியா கவனம் செலுத்தும்.

கொவிட் – 19 தொற்றுநோய், நீடித்த மோதல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் சீர்குலைந்த உலகில் நெருக்கடி மற்றும் குழப்பமான நேரத்தில் இந்தியாவின் தலைமைத்துவப் பதவி தொடங்குகிறது என்று இந்தியப் பிரதமர் தனது உரையில் கூறினார்.

வளர்ந்த நாடுகளின் முன்னுரிமைகளைப் புரிந்து கொண்டு, வளரும் நாடுகளின் சவால்கள் மற்றும் இலட்சியங்களைப் பாராட்டிஅரவணைத்து, எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் பாலமாகச் செயல்பட அனுமதிக்கும் நாடாக இந்தியாவின் தனித்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். உண்மையில், இந்தியா மேலாதிக்கம் மற்றும் மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் எந்தவொரு முகாமின் ஒரு பகுதியாக இல்லாததால், இந்தியா இதைச் செய்ய முடியும்.

ஒரு நாடு அல்லது ஒரு குழுவிற்கு சாதகமாக திசைதிருப்பப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக, இந்தியா மிகவும் வளமான மற்றும் இணக்கமான உலகத்தைப் பாதுகாப்பதற்கான தனது முயற்சிகளை வழிநடத்தும்.

உலகம் பன்முகத்தன்மை மற்றும் மறு சமநிலையை நோக்கி நகர்கிறது என்பதை இந்தியா நன்கு உணர்ந்துள்ளது என்பது வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மாஸ்கோவில் அந்நாட்டு (ரஷ்ய) வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தபோது தெரிவித்த கூற்றுப்படி வெளிப்படுகிறது.

இது நடைமுறைவாதம்/யதார்த்தவாதம் மற்றும் உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நெகிழ்வுத்தன்மைக்கான இந்தியாவின் விருப்பத்தை குறிக்கிறது.

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் ஜி – 20 அமைப்பு அதன் புவி – அரசியல் ஒழுங்கில் தனித்துவமான நிலையை மேம்படுத்தும். பல தசாப்தங்களாக இந்தியா வெற்றிகரமாக உழைத்தமையும் உலகளாவிய தெற்கு மற்றும் ஏழ்மையான நாடுகள் வளரும் நாடுகளின் தலைமைத்துவத்துக்கு அது உயர அனுமதித்த காரணங்களில் அடங்கும்.

மேலும் அதன் புதிய குறியீட்டுப் பெயர் சேர்ந்த ஆர்வம் சார்ந்த ஈடுபாடு, கருத்தியல் அல்லது பிடிவாதமான தடைகளிலிருந்து விடுபட்டு, நிச்சயமற்ற உலகில் அதன் பலத்தைப் பயன்படுத்த அனுமதித்துள்ளது.

பணக்காரர்கள் மற்றும் ஏழைகள், வலிமைமிக்கவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் ஆகிய இருவருமே அடங்கிய உலக சமூகத்தின் முன்னுரிமை யாது என்பது தொடர்பில் இந்தியா என்ன நினைக்கிறது என்பது ஏற்கனவே தெளிவாகத் தெரிகிறது.



இது போர்க் காலம் அல்ல என்று பிரதமர் மோடி செப்டெம்பர் மாதம் சமர்கண்டில் ரஷ்ய அதிபர் புடினிடம் தெரிவித்திருந்தார்.

இதே நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவுடன் நவம்பர் 15 அன்று மாஸ்கோவில் நடந்த கலந்துரையாடலின் போது மீண்டும் வலியுறுத்தினார். உலகப் பொருளாதாரம் ஒரு குறிப்பிடத்தக்க மோதலால் பாதிக்கப்படாத அளவுக்கு ஒன்றுக்கொன்று சார்ந்துள்ளது என்றும், உலகத் தெற்கே மிகவும் கடுமையான வலியாக இதை உணர்கிறது என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாகத் தொற்றுநோய் ஏற்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நியாயமான மற்றும் மனித உலகளாவிய ஒழுங்கை உருவாக்க இந்தியா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ரஷ்யப் பிரதமருடனான இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு பேசிய ஜெய்சங்கர், இந்தியா உரையாடல் மற்றும் இராஜதந்திரத்திற்கு திரும்புவதை வலுவாக பரிந்துரைக்கிறது என்றும், அமைதி, சர்வதேச சட்டத்திற்கு மரியாதை மற்றும் ஐ.நா. சாசனத்திற்கு ஆதரவு ஆகியவற்றின் பக்கம் இருக்கிறது" எனவும் குறிப்பிட்டார்.

உணவு தானியங்கள், உரம் ஏற்றுமதி மற்றும் உலகப் பொருளாதாரத்தை ஆபத்தில் ஆழ்த்துகின்ற விடயங்களில் இருந்து மீளும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவு போன்ற விடயங்களில் உதவ அவர் முன் வந்தார்.

உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான தனது பொறுப்பைக் காண இந்தியா எவ்வாறு தயாராக உள்ளது என்பதற்கான குறிப்பிடத்தக்க சமிக்ஞைகள் இவை.

உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் நன்கு புரிந்துள்ளது. உலகளாவிய மற்றும் இருதரப்பு பிரச்சினைகளுக்கு அமைதியான மற்றும் இணக்கமான தீர்வுக்கான ஒருங்கிணைப்பைக் கண்டறிய, சர்வதேச சூழ்நிலை மற்றும் அவற்றின் குறிப்பிட்ட முன்னோக்குகள் மற்றும் நலன்கள் குறித்த பல்வேறு நாடுகளின் கருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கு உரையாடல் மற்றும் பேச்சுவார்த்தைகள் முக்கியம் என்று இதுவரை புதுடெல்லி சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியா, மிகவும் வலிமையான நாடாக இருந்தாலும், சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கு மோதல் அல்ல, ஒத்துழைப்புதான் தேவை என்று நம்புகிறது. ரஷ்யா மற்றும் அமெரிக்கா மற்றும் சீனாவுடனான நீண்ட காலப் பதிவைக் கொண்ட இந்தியா, இன்று உலகளாவிய மற்றும் இருதரப்பு பிரச்சினைகளில் வேறுபாடுகள் ஏற்பட்டால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடுவர் என்ற நிலையில் உள்ளது.

கூட்டு கலாச்சார நடவடிக்கைகள், மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றங்கள், சுற்றுலா, வர்த்தக கண்காட்சிகள், விளையாட்டு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆகியவை மூலம் சுதந்திர வர்த்தகம் மற்றும் முதலீடு நடைபெறும் மற்றும் மக்களிடையேயான ஈடுபாடு ஊக்குவிக்கப்படும் மிகவும் வாழக்கூடிய உலகத்திற்கான இந்தியாவின் பார்வையில் பிராந்தியங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது முக்கிய முன்னுரிமையாக உள்ளது.

இந்தியாவின் G - 20 தலைமைத்துவத்துக்கு இன்னும் பல விடயங்கள் உள்ளன. அவை தலைமைத்துவப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு காலப் போக்கில் வெளிப்படுத்தப்படும்.

ஆனால் வசுதைவ குடும்பம் (உலகம் ஒரு குடும்பம்) என்ற முழக்கமும், சர்வே பவந்து சுகினா, சர்வே சந்து நிராமயஹ் (அனைவரும் மகிழ்ச்சியாகி, அனைவரும் ஆரோக்கியமாகிவிடுவார்கள்) என்ற கருத்தும் வழிகாட்டும் கொள்கைகளாக இருக்கும். இது இந்தியாவில் உள்ள ஒரு பெரிய பாரம்பரிய பிரார்த்தனையில் பொதிந்துள்ள தத்துவத்துடன் ஒத்துப்போகிறது. ந த்வேவவாஹம் கமயே ராஜ்யம், ந சவர்கம், ந புனர்பவம்; காமயே துகா தபதானம் ப்ராணிநாம் அர்த்தநானம் (கடவுளே, நீ எனக்கு ஒரு மாநிலத்தை, சொர்க்கத்தை அல்லது மறுபிறப்பை வழங்குவதை நான் விரும்பவில்லை. அனைத்து உயிரினங்களின் துயரங்களின் சுழற்சியை நீங்கள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றே நான் பிரார்த்திக்கிறேன்).

(மூலம்:ஏ.என்.ஐ.)



காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவே பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கம்!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் சாடல்



இராணுவத்தைப் பகைத்துக் கொண்டு எந்த அரசாங்கமும் ஆட்சியில் இருக்க முடியாது என்ற எழுதப்படாத சட்டம் நடைமுறையில் காணப்படுவதால் ஆட்சிக்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் இராணுவத்தைத் திருப்திப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதியை ஒதுக்குகிறது. மத்திய வங்கியும் நாணய அச்சகத்தை போன்று நாணயம் அச்சிடுகிறது. இந்த நிலை மாற்றம் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு எட்ட முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள பின்னணியில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

இனவாதம், இனவாத கருத்துக்கள் பொருளாதாரப் பின்னடைவிற்கு பிரதான காரணியாக உள்ளது. இனவாதத்தை முதலீடாகக் கொண்டு வரும் அரசியல் வாதிகளை சிங்கள மக்கள் ஆதரித்தார்கள். 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்ட போது சிங்கள சமூகத்தினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.தனிச் சிங்கள சட்டம் இயற்றப்பட்டதை தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத செயற்பாடுகளும், இன அழிப்பும் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இனவாதத்தை முதலீடாகக் கொண்டுள்ள அரசியல் தரப்பினருக்கு எதிர்வரும் காலங்களில் சிங்கள மக்கள் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இளம் தலைமுறையினர் இனவாதம் இல்லாமல் சிறந்த முறையில் சிந்திக்கின்றமை வரவேற்கத்தக்கது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளார்கள். மகாவலி அபிவிருத்தி சபை ஊடான காணி அபகரிப்பு, இராணுவ முகாம் விஸ்தரிப்பிற்கான காணி சுவீகரிப்பு உள்ளிட்ட சவால்களைத் தொடர்ந்து எதிர்கொண்டுள்ளோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் 671 ஏக்கர் நிலப்பரப்பில் கடற்படை கோட்டாபய கடற்படை முகாம் ஒன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மக்களின் விருப்பத்துடன் இந்தக் கடற்படை முகாம் அமைக்கப்படுவதாகக் கடற்படை குறிப்பிடுகிறது. தமது சொந்தக் காணிகளைக் கடற்படைக்கு விட்டுக்கொடுக்க விருப்பமில்லாத மக்கள் உள்ளார்கள். ஆகவே, விருப்பம் தெரிவிக்காதவர்களின் காணிகளை அரசாங்கம் முறையாக விடுவிக்க வேண்டும்.

மறுபுறம் தொல்பொருள் திணைக்களம் பௌத்த மயமாக்கலுக்காகத் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறது. முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மாவட்டங்களில் உள்ள இந்து ஆலயங்களை அழித்து அங்கு பௌத்த விகாரைகளை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பௌத்த மதத்திற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இந்து ஆலயங்களையும், இந்து மத சின்னங்களையும் அழித்து பௌத்த விகாரைகளை ஸ்தாபிக்க முயற்சிக்கும் போது தமிழ் மக்கள் மனங்களில் விரக்தி நிலை தோற்றம் பெறும்.

2009 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பு நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுள்ள நிலையில் கூட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு துறைக்கு 41 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீட்சி பெறுவதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள பேச்சுகளை முன்னெடுத்துள்ளது. நான்கு வருட காலத்துக்கு 290 கோடி அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொள்ள அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை தற்போது அமுல்படுத்தியுள்ளது.

யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து இன்று வரை பாதுகாப்புத் துறைக்கு மாத்திரம் 42 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தைப் பகைத்துக் கொண்டு எந்த அரசாங்கமும் ஆட்சியில் இருக்க முடியாது என்ற எழுதப்படாத சட்டம் நடைமுறையில் காணப்படுவதால் ஆட்சிக்கு வரும் அனைத்து அரசாங்கங்களும் இராணுவத்தை திருப்திப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதியை ஒதுக்கு கின்றன. மத்திய வங்கியும் நாணய அச்சக கூட்டுத்தபானத்தை போன்று நாணயம் அச்சிடுகிறது. இந்த நிலை மாற்றம் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு எட்ட முடியும். – என்றார்.

# பொருளாதார ரீதியில் .....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமல்ல, ஜனாதிபதி தன்னுடைய உரையிலே வடக்கு மக்களுடைய பிரச்சினை பற்றிச் சொல்லியிருந்தார். அதாவது, அவர் ஓர் அறிவிப்பை விடுத்திருக்கிறார். அது இனப்பிரச்சினைத் தீர்வுக்கா அல்லது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதிகூட அதற்கு ஆதரவு தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார். அது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு பேச்சு இருந்தால், கிழக்கு இல்லாமல் எந்தவொரு விடுதலையும் எந்தவொரு பேச்சும் வெல்லப் போவதில்லையென்பது எங்களுடைய கருத்தாகும். ஆனால், ஜனாதிபதி, வடக்கு சம்பந்தமாகத்தான் உரையாற்றினார். எங்களைப் பொறுத்தமட்டிலே வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை அழைத்து இந்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் விடுக்கின்றோம். இல்லையென்றால், அது ஒரு தீர்வுக்கான பேச்சாக இருக்காது. ஏமாற்றுகின்ற பேச்சாகத்தான் இருக்கும். முன்னாள் ஜனாதிபதிகூட இதுதொடர்பாக பலமுறை எங்களுடன் பேச்சு நடத்தி இருந்தார். இருந்தாலும், நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். அவர்கூட இன்றைக்கு இதற்கான ஆதரவை எங்களுக்கு நல்கியிருக்கின்றார்.

எனவே, வடக்கு, கிழக்கைச் சார்ந்த மக்களுடைய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு வழியைக் கையாள்வதற்காக முழுமையாகச் செயற்படுகின்றபோது உண்மையிலே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு வாய்ப்பு கட்டாயம் கிட்டும்.

ஆகவே, இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற கட்சிகளை அழைத்துப் பேசவேண்டும். தனியே வடக்கைப் பற்றிப் பேசினால் அது ஒரு முழுமையான விடயமாக இருக்காது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அந்த வகையிலே, ஜனாதிபதி மீண்டும் இந்த விடயத்தைக் கவனத்திலே எடுக்க வேண்டும். நல்லதொரு காலம் கனிந்திருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று எல்லோரும் ஒற்றுமையாகத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். நல்லமுறையிலே இந்தப் பேச்சு அமையுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எங்களுடைய மக்களுடைய அபிலாஷைகளைத் தீர்க்கின்ற வகையிலே தொடர்ந்து பேச்சிலே ஈடுபடுவோம் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்றைக்கு சிறையிலே இருந்த எங்களுடைய அரசியல் கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எனினும் இந்த விடயத்திலே ஒரு குறைபாடு இருக்கின்றது. இந்த விடயத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, நீதியமைச்சர் இங்கு இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமென்று நான் நினைக்கின்றேன். 13 வருடங்களாகச் சிறைக்கைதிகளாக இருந்தவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கின்ற நிலையில், அவர்களில் நால்வருக்கு இப்பொழுது புதிதாக பதுளை நீதிமன்றம் மற்றும் கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. கொழும்பு நீதிமன்றத்தில் எச்.சி. – 3650 என்ற வழக்கெண்ணிலும், பதுளை நீதிமன்றத்தில் எச்.சி. – 44 என்ற வழக்கெண்ணிலும் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

அவர்களுடைய பெயரை நான் இங்கு குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். கிருபாகரன், எஸ்எல்.குரே, நிமலன், குகதாசன் ஆகிய இந்த நால்வர் மீதே இவ்வாறு புதிதாக வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது. இதனை ஜனாதிபதி கவனத்திலெடுக்கவேண்டும்.

நான் இன்னுமொரு விடயத்தைச் சொல்லி எனது உரையை நிறைவுசெய்கின்றேன். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு இந்த அரசாங்கம் 2 லட்சம் ரூபாவினை வழங்குவதாக அறிவித்திருக்கின்றது. இது மிகச் சிறிய தொகையாகும். ஆனால், 15 வருடங்களுக்கு மேலாகச் சிறையிலே இருந்துவிட்டு விடுதலையாகி வந்திருப்பவர்களுக்கு லைக்கா நிறுவனத்தின் உரிமையாளர் சுபாஸ்கரன் மிக ஆர்வமாக முன்வந்து பாரிய உதவியைச் செய்திருக்கின்றார். அவ்வாறு சிறையிலிருந்து வெளியே வருகின்ற அரசியல் கைதிகளுக்கு அவர் தொடர்ந்தும் உதவிகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அவரைப் பற்றி ஒருசில விடயங்களைச் சொல்லி முடிக்கின்றேன்.

எங்களுடைய நாட்டைச் சேர்ந்த தமிழ் மகன் ஒருவர் லண்டனிலும், இந்தியாவிலும் மிகுந்த பிரபல்யமாகியிருப்பதுடன், அவருடைய செயற்பாடுகளும் பெருமைசேர்க்கின்ற வகையிலே இருக்கின்றது. அந்தவகையிலே, 15 வருடங்களுக்கு மேலாகச் சிறையிலிருந்து வெளியிலே வந்த எங்களுடைய தமிழ் அரசியல் கைதிகளுக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதான அதியுயர் பணியாக அவர் தன்னால் முடிந்த உதவிகளை வழங்க முன்வந்திருக்கின்றமைக்காக அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியைக் கூறுகின்றேன். – என்றார்.

# இந்திய பாதுகாப்பு நிமித்தம் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை பாதித்துள்ளன!

## சரத் வீரசேகர தெரிவிப்பு



இந்தியாவின் அழுத்தத்தால் வடக்கு மாகாணத்தில் சீனாவிற்கு அபிவிருத்தி செயற்திட்டங்கள் மறுக்கப்பட்டன. இந்தியாவின் பாதுகாப்பு நிமித்தம் எடுக்கப்பட்ட ஒருசில தீர்மானங்கள் இலங்கையின் வெளிவிவகார கொள்கையின் தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஆகவே வெளிவிவகார கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எமது நாட்டின் வெளிவிவகார கொள்கை பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்கும் வகையில் வெளிவிவகாரக் கொள்கை நடு நிலையான தன்மையில் பேணப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் இன்றும் உலக நாடுகளில் வாழ்கிறார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கும், ஜப்பான் நாட்டுக்கும் வழங்க முயற்சி எடுக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் வழங்கும் முயற்சி தோல்வியடைந்த தன் பின்னரே அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்பட்டது, ஆகவே, இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை நடுநிலையானது என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது.

இந்தியாவின் பாதுகாப்புக் காரணிகள் நிமித்தம் எடுக்கப்பட்ட ஒருசில தீர்மானங்கள் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை கேள்விக்குள்ளாக்கியது.

வடக்கு மாகாணத்தில் சீனாவிற்கு ஏதேனும் செயற்திட்டம் வழங்கும் போது அதற்கு இந்தியா அழுத்தம் பிரயோகிக்கும் போது அந்த செயற்திட்டத்தை அரசாங்கம் நீக்கிக் கொள்கிறது. இது முழு வெளிவிவகாரக் கொள்கைக்கும் எதிரானதாக அமையும்.

அதேபோல் சீனாவின் தொழில்நுட்பத் தகவல் கப்பல் இலங்கைக்கு வருகை தரும் போது இந்தியா கடும் அழுத்தத்தைப் பிரயோகித்தது எமது வெளிவிவகாரக் கொள்கை பொருளாதாரத்தில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகிறது. இந்தியாவின் அன்றைய கொள்கைக்கும், இன்றைய கொள்கைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்தியாவின் பிராந்தியங்களை ஆட்சி செய்தவர்களின் கொள்கைக்கு அமைய இந்தியாவுடனான இலங்கையின் வெளிவிவகார கொள்கை காணப்பட்டது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நல்லூர் திருவிழாக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

78 லட்சத்து 26 ஆயிரத்து 774 ரூபா 54 சதம் மாநகர சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய நல்லூர் உற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு மேலதிக வருமானமாக ஒரு கோடியே 59 லட்சத்து 43 ஆயிரத்து 21 ரூபா 44 சதம் ஏற்பட்டுள்ளது.

2019 ஏப்பிரல் குண்டு வெடிப்புக் காரணமாகவும், 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் கொரோனாத் தொற்றுக் காரணமாகவும் ஆலய சூழலின் வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்றும் நாளையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் ஆராய்கின்றார்.

இதற்காக இரு மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வவுனியா - மன்னார் வீதியில் உள்ள ஜனாதிபதி செயலகத்தின் செயலாளரின் உப அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படுகின்றது.

நாளைய தினம் மன்னாருக்குப் பயணிக்கும் ஜனாதிபதி தலைமன்னார் இறங்குதுறையை பார்வையிட்டு இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவைக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பில் ஆராய்கின்றார். இதனையடுத்து மன்னாரில் அமையவுள்ள மின்பவர் நிலைய இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளதோடு மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் சில பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வுகளுக்கு அந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## எஞ்சிய வாழ்வையாவது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையை சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக நால்வரின் விருப்பத்திற்கு அமைய தீர்மானிக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமிழக அரசிடமும் இந்திய மத்திய அரசிடமும் வேண்டுகோள் விடுகின்றது.

இவர்கள் தங்கள் வாழ் நாளின் பெரும் பகுதியை சிறையில் அனுபவித்து விட்டார்கள். சிறை வாழ்வில் மரணத்தோடு போராடி மரண வாயிலையும் எட்டிப் பார்த்தவர்கள் இவர்கள். விடுதலை, நீதி சார்ந்த விடயம் மட்டுமல்ல. அது வாழ்வு சார்ந்ததுமாகும். இவர்களுக்கு எஞ்சி இருக்கின்ற வாழ்வை சுதந்திரமாக அனுபவிக்க இடம் அளிக்க வேண்டும். ஆதலால் சிறப்பு முகாம் வாழ்வில் இருந்தும் விடுவித்து சமூகத்தில் ஒருவராக வாழ்வதற்கு இவர்களுக்கு இடம் அளிக்க வேண்டும்.

மேலும் இவர்கள் நால்வரையும் இலங்கைக்கு அனுப்ப இலங்கையிடம் ஒப்புதல் பெற உள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதனை நிறுத்தி அவர்கள் விருப்பிற்கு இடம் அளித்து வாழ்வு பாதுகாப்பு கொடுப்பது காந்திய நாட்டின் தார்மீக கடமையுமாகும்.

தமிழக அரசு இலங்கையிலிருந்து கடந்த காலங்களில் அகதியாக சென்றோரையும் தற்போதைய இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக வாழ்வு பாதுகாப்பு தேடி சென்றோரையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இந்நால்வரையும் சுய விருப்பத்தின் அடிப்படையில் வாழ இடமளிப்பது மனிதாபமான தன்மையை உறுதி செய்வதாக அமையும்.

இவர்களின் விடுதலை தொடர்பில் ஆர்வம்காட்டியபுலம்பெயர் அமைப்புகள் இவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் புகலிடம் விடயத்தில் ராஜதந்திர ரீதியாக செயல்பட்டு இந்தியா மறுக்குமேயானால் இவர்களுக்கான புகலிடத்தை ஆயத்தப் படுத்துமாறும் அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது. - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போதைவஸ்துப் பாவனைக்கு எதிராக

# கேரளாவில் சர்வதேச மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள் இருவர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.19

போதைப் பொருள் அற்ற சூழலில் சிறுவர்கள் வாழ்வதற்கான உரிமை என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்பினால் நடத்தப்படும் சர்வதேச மாநாட்டில் இலங்கையிலிருந்து இருவர் பங்கேற்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றங்களை தடுப்பதற்கான அமைப்பு, போதைப் பொருளுக்கு எதிரான சர்வதேச அமைப்பு, Forth way ஆகிய மூன்று அமைப்புகள் இணைந்து இந்தியாவின் கேரள மாநிலத்தின் திருவானந்தபுரத்தில் ஏற்பாடு செய்துள்ள 'சிறுவர்கள் போதைப் பொருள் அற்ற சூழலில் வாழ்வதற்கு உரிமை உள்ளவர்கள்' எனும் தலைப்பிலான செயலமர்வு மூன்று நாள்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றது. அறுபது நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கு பற்றுகின்றனர்.

போதைவஸ்து சிகிச்சை மற்றும் மறு வாழ்வு மையமான 'மேர்சி கொமினிற் றிசென்றர்' சார்பில் அதன் இயக்குநர் பி. எச்.எஸ்.பெனாட்டோ மற்றும் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த தவராசா பிரமேஸ் ஆகியோர் இதில் பங்குகொண்டுள்ளனர்.

இந்த மாநாடு ஆண்டுதோறும் ஒரு நாட்டில் இடம்பெறும் நிலையில் இந்த ஆண்டு இந்தியாவில் இடம்பெறுகின்றது.

## தென் சுமாத்ரா பகுதியில் நிலநடுக்கம் இலங்கைக்கு சுனாமி ஆபத்து இல்லை

கொழும்பு, நவ. 19

இந்து சமுத்திரத்தின் சுமாத்ரா தெற்கு பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு சுனாமி ஆபத்து ஏதும் இல்லை என தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் நேற்று முன்னிரவில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## மீண்டும் நேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையனார் மஹிந்த ராஜபக்ஷவுடன் இவ்வாறு கலந்து கொண்டிருந்தார்.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில், ஜூலை மாதம் 13 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை மாதம் 14 ஆம் திகதி பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

அதன்பின்னர், நாடு திரும்பிய கோட்டாபய ராஜபக்ஷ பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை.

எனினும், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக சுப்ரமணியம் சுவாமியுடன், கோட்டாபய ராஜபக்ஷ கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் எடுக்கப்பட்ட படம் அண்மையில் வெளியாகியிருந்தது.

அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதன் பின்னர் பொது வெளி நிகழ்வொன்றிற்கு முதல் தடவையாக கோட்டாபய ராஜபக்ஷ கலந்துக்கொண்டுள்ளார்

# கிட்டு பூங்காவில் 'கார்த்திகை வாசம்'













(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.19

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடாத்தும் 'கார்த்திகை வாசம்' என்ற மலர்க் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் அமைந்துள்ள மலர்க் கண்காட்சி நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை இது நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற்பாட்டாளர் ம.செல்வின் இரேனியஸும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.ரவியும் கலந்து சிறப்பித்தனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் மரநடுகை மாதத்தைச் வருவதோடு, மலர்க்கண்காட்சி ஒன்றையும் நடத்தி வருகின்றது.

# சுயநல அரசியலைவிடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்ய நாம் பழகிக்கொள்ள வேண்டும்!

## ரெலோவுக்கு சாணக்கியன் சாட்டையடி

அண்மையில் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை விமர்சித்திருந்தார். இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்யப் பழகவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திராய்மடு மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மின்னொளி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்துகொண்டு மின்னொளி உபகரணங்களை பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் வழங்கி வைத்தார். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் சமஷ்டியைத் தீர்வாக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டமாகவே நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நான் இன்னும் கட்சி தலைவராக வரவில்லை.

அந்தக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சம்பந்தன் ஐயா ஆகியோர் மட்டுமே அந்த கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர். பலர் அந்த சந்திப்புக்குவருவதாக சொல்லியிருந்தாலும் அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்ளாத கட்சிகளா என்பது எனக்கு தெரியாது. அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் என்றால் அவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரின் கருத்தை மதித்து அவர்கள் வந்திருக்கவேண்டும்.

அண்மையில் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சித்திருந்தார். இவை மிகவும் கவலையான விடயங்கள். இவர்கள் சுயநல அரசியலை விடுத்து தமிழ் சமூகத்துக்காக அரசியல் செய்யப் பழகவேண்டும்.



வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவா எதிர்ப்பா என்பது தொடர்பில் எங்களது நாடாளுமன்ற குழு கூடி தீர்மானத்தை எடுக்கும்.

இந்த வரவு – செலவுத் திட்டம் மிகவும் கவலைக்குரியதாகவுள்ளது. அரசாங்கம் விசேட தேவையுடையவர்களின் கொடுப்பனவைக் குறைத்துள்ளனர்.

விசேட தேவையுடையவர்களிடம் வழிப்பறி செய்யும் அரசாங்கமாகவே நாங்கள் இந்த அரசாங்கத்தைப் பார்க்க முடிகின்றது.

ஒரு பக்கம் விசேட தேவையுடையவர்களின் கொடுப்பனவைக் குறைக்கும் அதே நேரம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர்களுக்கு அதிகளவு சலுகையைக் கொடுத்து அவர்களை ஒரு பக்கத்தில் பணக்காரர்களாக மாற்றும் போது இந்த விசேட தேவையுடைய வர்களின் கொடுப்பனவைக் குறைத்தது மிகவும் கவலையான விடயம்.

இந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில் இவ்வாறானவர்களை இன்னும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். அதனைவிடுத்து அவர்களிடம் வழிப்பறி செய்வது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். – எனத் தெரிவித்தார்.

# கடந்த 3 மாதங்களில் மின்சாரசபைக்கு 4 ஆயிரத்து 431 கோடி ரூபா நஷ்டமாம்!

கடந்த மூன்று மாதங்களில் இலங்கை மின்சார சபை 4 ஆயிரத்து 431 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் ஜூலை மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலான காலாண்டில் இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மின்சார சபை கடந்த ஓகஸ்ட் மாதம் மின்சார கட்டணத்தை 75 சதவீதமாக அதிகரித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரவு – செலவுத் திட்டத்தால் சலுகைகளை நம்பியிருக்கும் மக்கள் குற்றவாளிகளாகினர்!

## ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



ஆட்சியாளர்கள் செய்த தவறுகளால் தற்போது சலுகைகளை நம்பியிருக்கும் ஏழைமக்கள் இந்த வரவு – செலவுத் திட்டத்தால் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மூன்றாம் நாள் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது வாழ்க்கையைச் சரியாக நிர்வகிக்க முடியாத குடிமக்கள் மீதே இந்தப் பழி சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இந்தப் பிரச்சினையை இவ்வாறான கண்ணோட்டத்தில் பார்ப்பதென்பது எவ்வளவு தீமையான விடயம் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# வாகனப் பதிவுக்கான கட்டணங்கள் உயர்வு!

வெள்ளிக்கிழமை அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சாதாரண முறையின் கீழ் வாகனங்களைப் பதிவு செய்ய 2 ஆயிரம் ரூபா கட்டணமும் முன்னுரிமை அடிப்படையிலான கட்டணம் 3 ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஒருநாள் சேவையின் கீழ், வாகனங்களைப் பதிவு செய்வதற்கான கட்டணம் 4 ஆயிரம் ரூபாவாகவும் தாமதமாகி செலுத்தப்படும் பதிவுக் கட்டணங்கள் பல்வேறு கட்டங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு தாமதக்கட்டணமாக வாகனங்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 50 ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பதிவு செய்யப்பட்ட வாகனச் சான்றிதழின் விவரங்களை மாற்றுவதற்கு 3 ஆயிரம் ரூபா கட்டணம் வசூலிக்கப்படும்.

# பசறை கோனாகலை முத்துமாரியம்மனுக்கு நாளை மஹா கும்பாபிஷேகப் பெரு விழா!

நூற்றாண்டுகள் பழைமையான பதுளை பசறை கோனாகலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

சித்தர்களின் குரல் சமஸ்தானத்தின் கீழ் அதன் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் பூரண ஏற்பாட்டில் புனரமைக்கப்பட்டு நாளை கும்பாபிஷேகம் காண இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை கணபதி ஹோமத்துடன் அனைத்து கிரியைகளும் ஆரம்பமாயிருக்கின்றன.



இந்தக் கும்பாபிஷேகம் அந்த ஊர் மக்களின் 40 வருட கனவு என அந்த ஆலயத்தின் தலைவர் எஸ். சிம்மேந்திரன் குழுவினர் கண்ணீர் மல்கக் கூறினர்.



இரவு பகலாக இந்த மாபெரும் கும்பாபிஷேகத்தை தமது செலவில் நெறிப்படுத்தி ஒழுங்கமைத்த சித்தர்களின் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி. தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன், சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள், டிரோன் போடியார், வீரமுனை சனுஷ்காந்த் ஆகியோருக்கு ஆலய பரிபாலன சபையினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

# பாட்டும் நானே? .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழையும், தமிழினத்தையும் பாதாளத்திற்குள் தள்ளும் இக்காரியங்களைச் செய்யச் சொல்லிவிட்டுத் தாம்தான் தமிழினத்தின் காவலர்கள் என்கிறார்கள் இவர்கள். இவற்றையெல்லாம் அழித்துவிட்டு எதை வைத்து இவர்கள் தமிழினத்தைக் காக்கப் போகிறார்களாம்? இந்த இலட்சணத்தில், ஆன்மீகவாதிகள் தமிழை அழிக்கிறார்கள், நாங்கள்தான் தமிழைக் காக்கிறோம் என்ற 'பீத்தல்' வேறு. கேட்பார் இல்லை என்ற துணிவில், இவர்கள் பேசித் திரிகிறார்கள்.

இறை நம்பிக்கையையும், ஆலய வழிபாட்டையும் தமிழர்களிடமிருந்து எவராலாவது நீக்கிவிட முடியுமா? இவர்களின் வீடுகளிலேயே வழிபாடு நடந்துகொண்டிருப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையான விடயம். வீட்டைத் திருத்த முடியாதவர்கள் நாட்டைத் திருத்தப் போகிறார்களாம்.

இனி உங்களின் பெரியார் பற்றிய கருத்திற்கு வருகிறேன். மிக 'சென்சிற்றிவ்வான' விடயத்தைத் தொட்டிருக்கிறீர்கள். எவரதும் மனம் நோகாமல் மிக நிதானமாகப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒன்றைத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளுங்கள். நான் பெரியாரின் எதிரி அல்லன். அதே நேரம் அவரது பக்தனும் அல்லன். தயவு செய்து பெரியாரைப் போற்றுகிற எவரையும் நான் இழிவு செய்வதாய் நினையாதீர்கள். தம்மை அவர்தான் ஈடேற்றியதாய் நினைப்பவர்கள் தாராளமாய் அவரைப் போற்றலாம். அது அவரவர் விருப்பம்.

எனது நிலை வேறு. என் அறிவுக்கும், ஆன்மாவுக்கும் ஆயிரம் அதிசயங்களைக் காட்டி என்னை ஈடேற்றிய எத்தனையோ பெரியார்கள் என் மதத்திலேயே இருக்கிறார்கள். அவர்களைப் போற்றவே எனக்கு நேரம் போதவில்லை. மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாய் எம் இனத்தை நிமிர்வோடு வழிநடத்தி வரும் அவர்களின் முன்பாக வேறெவரையும் எனக்கு பெரியாராய் நினைக்கத் தோன்றவில்லை. அவ்வளவே!

**உலகநாதரின் ஒப்பீனியன் * வர வர வாரிதியாருக்கு 'தில்' கூடிக்கொண்டே வருகுது பாருங்கோ!**

**4. கேள்வி:-** தமிழர் பிரச்சினை பற்றிப் பேச வருக என, பிரதமர் அழைப்பு விட, ஒன்றிணைந்து செல்வதற்காய், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் சார்பாக சுமந்திரன் விட்ட அழைப்பினை, அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் நிராகரித்து விட்டமையைப் பார்த்தீர்களா?

**பதில்:-** அதற்குப் பல காரணம் சொல்கிறார்கள். காரணம் எதுவானாலும், தமது தன்மானத்திற்காக இன நன்மையையும் தூக்கி எறியும் இவர்கள் தான் எங்கள் தலைவர்களாம். வெட்கமாய் இருக்கிறது. இவ்விடயத்தில் பகை மறந்து தீர்க்கமான முடிவெடுத்துச் செயற்படும் மலையகத் தலைவர்களிடம் இவர்கள் 'எதையேனும்' வாங்கிக் குடிக்கலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * என் இனமே என் சனமே என்னை உனக்குப் புரிகிறதா? எனது குணம் தெரிகிறதா?**

**திருத்தங்கள் உலகநாதரின் கைவண்ணம். ஹி..ஹி..**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2022இல் வெளியிடப்பெற்றது.